காரைதீவு அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் சமூகம்
KARAITIVU DEVELOPMENT & PLANNING SOCIETY

விடுமுறைக்கால மாணவர் நல கல்வி அபிவிருத்தித் திட்டம்
EDUCATIONAL DEVELOPMENT PLAN ON VACATION PERIOD

சகல பாடங்களுக்குமான மாதிரி வினாத்தாள்கள்
MODEL PAPERS FOR ALL SUBJECTS

KDPS

GRADE - 05

அனுசரணை:

AUSKAR

ஆஸ்திரேலியா காரைதீவு மக்கள் ஒன்றியம்
AUSTRALIAN KARAITIVU ASSOCIATION

Scanned with CamScanner

காரைதீவு அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் சமூகம்

மதிப்புக்குரிய பெற்றோர்களே!
வணக்கம்.

விடுமுறைக் காலத்தை மாணவர்கள் பயன்படுத்துவதற்கான வழிகாட்டல்கள்

எதிர்பாராத கொரோனா வைரஸ் நோய் (COVID-19) அச்சுறுத்தல்கள் காரணமாக நாட்டின் சகல பாடசாலைகளும் திடீரென மூடப்பட்டதால் ஏனைய சகல விடயங்கள் போன்று மாணவர்களது கற்றல் நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டு விட்டன. நோய் ஆபத்துக்களிலிருந்து நாட்டு மக்களைப் பாதுகாப்பதற்காக அரசாங்கத்தின் சகல நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைப்பது எமது கடமையாக இருப்பது போல, இந்த எதிர்பாராத நிலைமை காரணமாக மாணவர்களது கல்வியில் பெரும் பாதிப்புக்கள் ஏற்படாதவண்ணம் கண்காணிப்பதும் எங்களது பொறுப்பாகும். திடீரென விடுமுறை அறிவிக்கப்பட்டதால் இக்காலப் பகுதியில் எவ்வாறு கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுவது என்ற வழிகாட்டல்களை மாணவர்களுக்கு வழங்குவதற்கான அவகாசம் கிடைக்காமல் போய்விட்டது. எனவே இவ்விடயம் சம்பந்தமான சில வழிகாட்டல்களைப் பெற்றோர் என்றவகையில் உங்களுக்கு வழங்குவதற்காகவே நாங்கள் இக்கடிதம் மூலம் உங்களைத் தொடர்பு கொள்கின்றோம்.

நீண்ட விடுமுறைக் காலப்பகுதியை மாணவர்கள் பயனுள்ள வழிகளில் எவ்வாறு கழிப்பது என்ற வழிகாட்டல்களை வளர்ந்தவர்களாகிய நாங்கள் சரியாகக் கொடுக்காது போனால் மிகப் பெறுமதியான காலத்தை வீணடித்து விட்டு. பாடசாலையில் கற்ற விடயங்களையும் மறந்து விட்டு தவறான நடைமுறைகளையும் பழக்கவழக்கங்களையும் பழகிக் கொள்வதால் குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் தொல்லையாகவும் பாடசாலைக்குப் பொருத்தமற்றவர்களாகவும் நெறி பிறழ்வானவர்களாகவும் மாறக்கூடிய ஆபத்தான நிலை ஏற்படலாம்.

எனவே இந்நிலையைக் கருத்திற் கொண்டு இக்காலப்பகுதியை அவர்கள் பயனுள்ள வழிகளில் எவ்வாறு கழிக்கலாம் என்பதற்கான சில வழிகாட்டல்களைத் தருகின்றோம்.

01. கற்றல் தொடர்பான விடயங்கள் :

1. தினமும் பாடசாலைப் பாடங்களை மீட்டல். அதற்கான வீட்டு நேரசூசியை அமைத்துக்கொள்ளல். (வீட்டு நேரசூசி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது)
2. தினமும் குறைந்தது 01 மணித்தியாலமாவது பத்திரிகை, புத்தகங்கள், புராண நூல்கள் என்பவற்றை வாசித்தல்.
3. முக்கியமான பாடங்களுக்கான செயல்நூல்களிலுள்ள பயிற்சிகளைச் செய்து விட்டு பாடசாலை ஆரம்பித்ததும் பாட ஆசிரியரிடம் காட்டுதல்.
   தரம் 6 - 11 மாணவர்கள் தமிழ், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, சமயம் போன்ற செயல்நூல்களையும், தரம் 3, 4, 5 மாணவர்கள் தமிழ், கணிதம், சுற்றாடல் செயல்நூல்களையும் செய்தல். இவற்றுக்கு மேலதிகமாக வகுப்பாசிரியர்கள் தரும் வேலைகளையும் செய்தல்
4. தவணைப் பரீட்சை வினாத்தள்களைச் செய்தல்.
5. நாளாந்த எழுத்துப் பயிற்சி (தமிழ் பாடக் கொப்பியில் எழுத வேண்டும்)
   - தரம் 03, 04 மாணவர்கள் தினமும் விரும்பிய 03 வசனங்கள் எழுதுதல்.
   - தரம் 05 மாணவர்கள் தினமும் விரும்பிய 05 வசனங்கள் எழுதுதல்.
   - தரம் 06, 07 மாணவர்கள் தினமும் விரும்பிய 07 வசனங்கள் எழுதுதல்.
   - தரம் 09 மாணவர்கள் தினமும் 50 சொற்கள் கொண்ட ஒரு பந்தியை எழுதுதல்.
   - தரம் 10, 11 மாணவர்கள் தினமும் 75 சொற்கள் கொண்ட ஒரு பந்தியை எழுதுதல்.
     (தமது பிள்ளையின் வகுப்புக்குப் பொருத்தமானதைப் பெற்றோர் தெரிவு செய்து கொடுத்து எழுத ஊக்கப்படுத்தவும்)
6. வாரத்திற்கு 03 சித்திரங்களை வரைதல் (விரும்பியதை வரையலாம்)
7. கணித வாய்ப்பாடுகளை மனனம் செய்தல் (2 - 12 வாய்ப்பாடுகள் ஆங்கில, சிங்களப் பாடப் புத்தகத்தைத் தினமும் வாசித்தலும் ஆங்கில, சிங்கள மொழிச் சொற்களைக் கொப்பியில் எழுதி மனனமிடுதலும்.

Scanned with CamScanner

02. திறமைகளை வளர்ப்பதற்கான செயற்பாடுகள் :

தொடர்ந்தும் பாடசாலைப் பாடங்களை மாத்திரம் படித்துக் கொண்டிருக்க வேண்டுமென்பது கட்டாயமில்லை. ஏனெனில் கல்வி என்பது புத்தகப்படிப்புடன் குறுகி விடுவதல்ல. எதிர்கால வாழ்வை வெற்றிகரமாக வாழ்வதற்கு மாணவர்களிடம் மறைந்திருக்கும் பல்வேறு திமைகளை வெளிக் கொண்டுவந்து அவற்றை வளர்த்து விடுவதும் கட்டாயமாகும்.

எனவே நாம் இங்கு குறிப்பிடுவது போன்ற திறமைகளை வளர்த்துக் கொள்ள மாணவர்களுக்கு வழிகாட்டுவதன் மூலம் அவர்கள் பல்வேறு துறைகளில் முன்னேறுவதற்கும் ஓய்வு நேரத்தைப் பயனுள்ள முறையில் கழிப்பதற்கும் கணனி, கைப்பேசி மற்றும் இலத்திரனியல் சாதனங்களில் வீணாகக் காலத்தைக் கழித்து நெறி பிறழ்வைத் தடுப்பதற்கும் மன உளைச்சல், விரக்தி என்பவற்றிலிருந்து அவர்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் உதவியாக அமையும்.

1. ***வீட்டு வாசிகசாலை ஒன்றை (Home Library) அமைத்தல்*** : அது குறைந்தளவு புத்தகங்களைக் கொண்டு சிறியதாக இருந்தாலும் சரி. அதில் புத்தகங்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பவற்றைத் தேடிச் சேர்க்கச் சொல்லலாம். பிள்ளைகளுடன் பெற்றாரும் சேர்ந்து வாசிக்கலாம்.

2. ***வீட்டுத் தோட்டம் அமைத்தல்*** : காய்கறி வகைகள், பூக்கன்றுகள் என்பவற்றைத் தோட்டத்தில் அல்லது முற்றம், கொங்கிரீட் என்பவற்றில் சாடிகளில் அல்லது பசளை பேக், அரிசிப் பை என்பவற்றில் நடலாம். வீட்டுத் தேவைக்கு மற்றும் வருமானத்திற்கும் உதவும்.

3. ***கோழி வளர்ப்பு, காடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு*** : இவற்றில் வசதியானதை, சிறிய அளவில் அல்லது பெரிய அளவில் செய்யப் பெற்றோர் உதவலாம். இவை குடும்பத்தின் வருமானத்திக்கும் உதவியாக அமைவதுடன் தொழிற் பயிற்சியாகவும் அமையும்.

4. ***உடற்பயிற்சி மற்றும் விளையாட்டுக்கள் :*** அதிகமான நேரத்தை வீணாக அல்லது தூக்கத்தில் கழிப்பதைத் தவிர்த்து உடலைச் சோம்பேறித்தனமின்றி சுறுசுறுப்பாகவும் நோய்களின்றியும் வைத்துக் கொள்வதற்கு விளையாட்டுக்களைப் பெற்றோர் கட்டாயம் ஏற்பாடு செய்து கொடுக்கவும்.
    - கயிறு பாய்தல்
    - பந்தடித்தல்
    - பெட்மின்டன் விளையாடுதல்
    - கயிறு இழுத்தல்
    - வொலிபோல் விளையாடுதல்
    - உடற்பயிற்சிகள் செய்தல்
    - மற்றும் உங்களுக்கு வசதியான ஏனைய விளையாட்டுக்கள்.

இவற்றை ஆண், பெண் பிள்ளைகள் இருபாலாரும் செய்யலாம். பெற்றோரும் சேர்ந்து குடும்பமாகவும் செய்யலாம். அப்போது பெற்றோர் - பிள்ளைகளுக்கிடையிலான அன்பும் தொடர்பும் அதிகரிக்கும். விளையாட்டிற்குத் தேவையான பொருட்களை வாங்கிக் கொடுக்கலாம்.

5. ***வீட்டை ஒழுங்குபடுத்துவதில் பெற்றோருக்கு உதவுதல் :*** வீட்டுப் பொருட்களை ஒழுங்குபடுத்தி வீட்டுச் சூழலைச் சுத்தமாக வைத்திருப்பதற்கான சிரமதானங்களைச் செய்யலாம்.

6. ***தையல் வேலைகள், சமையல் வேலைகள், கணனிப் பயிற்சிகள் :*** தையல் மெஷின் இருக்கும் வீடுகளில் ஆண், பெண் பிள்ளைகளுக்குத் தையலைப் பழக்கலாம். கணனியில் குறிப்பிட்ட நேரத்திற்கு மாத்திரம் வேலைகளைக் கொடுக்கலாம். சமையல் வேலைகளில் பெண் பிள்ளைகளை ஈடுபடுத்திப் பழக்குவதைப் போன்று ஆண் பிள்ளைகளையும் பழக்கலாம்.

7. ***மத அனுட்டானங்களில் ஈடுபடுதல்*** : சூரிய நமஸ்காரம், தியானம், மூச்சுப் பயிற்சி, யோகா, திருமுறை ஓதுதல் பிரார்த்தனைகளில் ஈடுபடுவதற்கு ஆர்மூட்டல்.

8. ***செய்திகளை அறிந்து கொள்ளல் :*** நாட்டு நிலைமைகள், உலக நிலைமைகள் பற்றிய செய்திகளை பத்திரிகைள், டீவீ, ரேடியோ மூலம் அறிந்து கொள்ளுதல்.

9. ***வீட்டு மாணவர் மன்றம் :*** விட்டில் 3, 4 பிள்ளைகள் இருந்தால் அல்லது அயல் வீட்டுப் பிள்ளைகளைச் சேர்த்து அவர்கள் மத்தியில் வாரத்திற்கு 01 அல்லது 02 மாணவர் மன்றங்களைச் செய்யுமாறு சொல்லலாம். பேச்சு, கதை, பாட்டு, நாடகம்..... இன்னும் நிகழ்ச்சிகளைப் பிள்ளைகளுக்குத் தயார்படுத்தி குடும்பத்துடன்

Scanned with CamScanner

அவற்றைப் பார்க்கலாம். சில வேளை பரிசுகளையும் பெரியவர்கள் கொடுத்தால் அல்லது வீடியோ பன்னி வைத்தால் இன்னும் உற்சாகமடைவார்கள்.

10. பயனுள்ள CD க்களைப் பெற்றுக் கொடுத்தல் : கணனி, கைப்பேசி மற்றும் இலத்திரனியல் சாதனங்களில் மாணவர்கள் மூழ்குவதைத் தவிர்க்க வேண்டுமாயின் அவற்றிற்கு மாற்றீடாக நல்ல பயனுள்ள CD களைப் பார்ப்பதற்குத் தினமும் சிறிது நேரத்தை ஒதுக்கலாம். (பாடத்துடன் தொடர்பான விடயங்கள், இதிகாச புராணக் கதைகள், பெரியார்கள், விஞ்ஞானிகளின் வாழ்க்கை வரலாறு, பேச்சுக்கள், வரலாறு சம்பந்தமானவை, இறைவனின் இயற்கைப் படைப்புக்கள்...)

11. வாராந்த குடும்பக் கலந்துரையாடல் : வாரத்தில் வசதியான ஒரு நாளில் தந்தை, தாய் மற்றும் குடும்பத்தவர்கள் பிள்ளைகளுடன் சேர்ந்து பிள்ளைகள் சம்பந்தமான சகல விடயங்களையும் கலந்துரையாடுவதற்கான ஓர் அமர்வை ஏற்படுத்திக் கொள்ளல். (ஒன்றரை அல்லது இரண்டு மணித்தியாலம் அளவில்) அதில் பின்வரும் விடயங்கள் பற்றிக் கலந்துரையாடலாம் :

- பிள்ளைகளின் படிப்பு சம்பந்தமான விடயங்கள்
- அவர்களது பிரச்சினைகள் பற்றிக் கதைக்கலாம்
- வணக்க வழிபாடுகள்
- குடும்ப விவகாரங்கள், வீட்டின் பொருளாதார நிலைமைகள்
- பொழுதுபோக்குகள், உடலாரோக்கியம், உணவுப் பழக்கங்கள்
- மற்றும் ஏனைய விடங்கள்...

எதிர்பாராத வகையில் கிடைத்த பாடசாலை விடுமுறையில் பிள்ளைகளை எவ்வாறு வழிப்படுத்துவது என்பது பற்றிய பெற்றோர்களுக்கான சில ஆலோசனைகளை மேலே தந்திருக்கின்றோம். இவ்விடுமுறை காலத்தை திட்டமின்றி வீணடித்து மாணவர்கள் தீய செயற்பாடுகளிலும் சீர்கேடுகளிலும் விழுந்து அறிவையும் ஒழுக்கத்தையும் இழந்து விடாமல் பாதுகாப்பது எங்கள் அனைவரதும் பொறுப்பு என்பதால் பெற்றோர்கள் இந்த விடயங்களில் கூடிய கவனமெடுத்து வழிகாட்டுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம். மேற்கூறப்பட்ட விடயங்களில் பிள்ளைகளை ஈடுபடுத்துவதன் மூலம் பிள்ளைகள் நிச்சயம் பயனடைவார்களென எதிர்பார்க்கின்றோம். இங்கு கூறப்பட்டவற்றில் எதனையும் செய்யாதிருக்காமல் அல்லது பிள்ளைகள் செய்வதைக் கண்காணிக்காமல் விட வேண்டாம். தமக்கு வசதியானவற்றைப் பிள்ளைகளுடன் கலந்துரையாடிச் செய்யுங்கள். இதற்கும் மேலதிகமான ஆலோசனைகள் தேவைப்பட்டால் நீங்கள் பிள்ளையின் வகுப்பாசிரியரைத் தொடர்பு கொள்ளலாம். அத்துடன் மேற்கூறப்பட்ட விடயங்களை எந்தளவுக்கு நிறைவேற்றினார்கள் என்பது பற்றிப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட பின் மாணவர்கள் கேட்கப்படுவார்கள் என்பதையும் சிறப்பாக இவற்றைச் செய்து வரும் மாணவர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படும் என்பதையும் அவர்களுக்குச் சொல்லி விடுங்கள். குறிப்பாகப் படிக்கும் விடயங்கள் பற்றிக் கண்டிப்பாக விசாரிக்கப்படுவார்கள். மேலும் நிறைவேற்றிய விடயங்களைக் குறித்துக் கொள்வதற்கான படிவம் ஒன்றையும் இத்துடன் அனுப்புகின்றோம். விடுமுறை முடிந்து வந்து (பெற்றோரின் கையொப்பத்துடன்) தமது வகுப்பாசிரியரிடம் அதனை ஒப்படைக்கச் செய்யவும்.

-நன்றி-

இப்படிக்கு

KDPS கல்வி மேம்பாட்டுக் குழு

திருமதி.தனுஷியா.ராஜசேகர்-SLEAS
திரு.A.சஞ்சீவன்-SLEAS
திரு.S.ஹரீந்திரன்-M.Sc(Agro) ARM-CCB
திரு.T.சுஜிகரன்-B.A
திரு.V.சத்தியமாறன்-B.A

Scanned with CamScanner

கொரோனா (Covid-19) தொடர்பான பொது அறிவு விடயங்கள்

01. கொரோனா வைரஸ் முதன் முதலில் எந்த நாட்டில் இனங்காணப்பட்டது?
சீனாவில் (ஹுபேய் மாகாணம் தலைநகர் வுஹான் இல்)

02. கொரோனா வைரஸ் எந்த விலங்கில் இருந்து பரவியதாக நம்பப்படுகின்றது?
வௌவால்

03. கொரோனா தொற்றுக்கு இலக்கான புகழ் பெற்ற அரச குடும்பத்தைச் சேர்ந்த நபர் யார் ?
பிரித்தானிய இளவரசர் சார்ள்ஸ்

04. இதுவரை கொரோனா தொற்றுக்கு இலக்கான ஒரு நாட்டின் அதிபர் யார்?
பிரித்தானிய பிரதமர் வொரிஸ் ஜோன்ஸன்

05. கொரோனாவினால் அதிக உயிரிழப்புகளைச் சந்தித்துள்ள ஐரோப்பிய நாடு எது?
இத்தாலி (29.03.2020)

அன்பார்ந்தவர்களே!



தற்போது வைரஸ் சம்பந்தமான பதட்ட நிலையில் நாங்கள் என்ன செய்வது என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கின்றோம். எமது நம்பிக்கைகளை இந்த வேளையிலே நாம் இழக்கக் கூடாது. நாம் அனைவரும் இணைந்து தினசரி மாலை ஆறு மணிக்கு எமது எமது கடவுள்களின் பெயரில் பிரார்த்தனை செய்கின்ற பொழுது தற்போதைய நிலையை நல்லதொரு மாற்றத்திற்குக் கொண்டுவரலாம். இதை ஒரு மூட நம்பிக்கையாக நீங்கள் கருதினாலும் பறவாயில்லை ஆனால் ஒரு 5 நிமிடங்கள் உங்களுக்காகவும். உங்கள் குடும்பத்திற்காகவும். உங்கள் உறவுகளுக்காகவும். உலக நலத்திற்காகவும் ஒதுக்கித் தான் பார்ப்போமே! எல்லோரும் ஒரே நேரத்தில் பிரார்த்தனை செய்தால் நல் விளைவு அதிகமாகும்.

தினசரி மாலை 6 மணிக்கு எல்லோரும் 5 நிமிடங்கள் பிரார்த்தனையில் ஈடுபடுவோம். இந்த நிலமையை மாற்றித் தரும்படி இறைவனை இறைஞ்சுவோம்.

Scanned with CamScanner

<u>ஆட்கொல்லி நோயான கொரோனாவில் இருந்து நம்மையும் நாம் நேசிக்கின்ற தாய் நாட்டையும் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு கீழுள்ள சுகாதார நடைமுறைகளை நாம் பின்பற்றுவதோடு எம்மைச் சார்ந்தவர்களையும் அதனைப் பின்பற்றுவதற்கு வழிப்படுத்துவோம்.</u>

1. சவர்க்காரம் மற்றும் கை சுத்திகரிப்பானினால் 20 செக்கன்கள் வரை கைகளை அடிக்கடி கழுவுங்கள். மேலதிகமாக அல்கஹால் கொண்ட கை சுத்திகரிப்பானை கைகளில் பூசிக்கொள்ளலாம்.



2. இருமல் அல்லது தும்மல் வரும் போது கைக்குட்டையை அல்லது ரிசுவை பாவித்து வாயையும் மூக்கையும் மூடுங்கள் அவை இல்லாத பட்சத்தில் வசதியான முழங்கையினால் அவற்றை மூடுங்கள். ரிசுவை மூடியுடன் கூடிய குப்பைக் கூடைக்குள் வீசுங்கள்.





3. அடிக்கடி முகம், மூக்கு, கண் மற்றும் வாயைக் கையினால் தொடுவதை தவிர்த்துக் கொள்ளுங்கள்.



4. இருமல், சளி, காய்ச்சல் உள்ள எவருடனும் நெருங்கிய தொடர்பைத் தவிருங்கள்.

5. உங்களுக்கு அல்லது உங்களுக்குத் தெரிந்த ஒருவருக்கு காய்ச்சல் இருமல் அல்லது சுவாசிப்பதில் பிரச்சினை இருப்பதாக உணர்ந்தால் அருகிலுள்ள அரசாங்க வைத்தியசாலைக்குச் சென்று பரிசோதித்துக் கொள்ளுங்கள். அத்துடன் பரிந்துரைக்கப்பட்ட முகமூடியை (mask) அணிந்து கொள்ளுங்கள்.

6. சன நெரிசல் உள்ள இடங்களை தவிருங்கள்

Scanned with CamScanner

7. ஒருவருடன் உரையாடும் போது அல்லது பொது இடங்களுக்குச் செல்லும் போது இன்னொருவரிடம் இருந்து குறைந்தது 1 மீற்றர் இடைவெளியைப் பேணுங்கள்.

8. வெளியில் சென்றுவிட்டு வீட்டுக்குள் செல்லும் போது சவர்க்காரம் போட்டு குளித்து விட்டு அல்லது கை, கால், முகம் என்பவற்றை நன்றாகக் சவர்க்காரம் இட்டு கழுவி விட்டுச் செல்லுங்கள்.

9. நாணயத் தாள்கள், நாணயக் குற்றிகளை தொட்டு பரிமாறுவதை இயன்றளவு தவிர்த்துக் கொள்ளுங்கள்.

கொரோனா நோயைக் கட்டுப்படுத்தும் முகமாக அரசாங்கம் பிறப்பிக்கும் உத்தரவுகளை மதித்து நடப்பதோடு ஏனையோரையும் அவற்றை மதித்து நடக்கக் கற்றுக் கொடுத்து சமூகப் பொறுப்புள்ள, நாட்டுப் பற்று மிக்க பிரசைகளாகத் திகழ்வோம்.

KDPS இன் கடந்த கால செயற்பாடுகள்...

- சுயதொழிலுக்காக ஆலோசணை வழங்கி வருகின்றமை.
- தெரிவு செய்யப்பட்ட (க.பொ.த உயர்தர) 20 மாணவர்களுக்கான 2,500/= நன்கொடையாக வழங்கியமை.
- காரைதீவில் உள்ள அங்கவீனமுற்றோருக்கான உதவிகள் வழங்கியமை.
- காரைதீவில் உள்ள வறிய குடும்பங்களுக்கான 1ம் கட்டமாக 214 குடும்பங்களுக்கு 500/= உணவு வெளச்சர் வழங்கியமை.
- காரைதீவில் உள்ள வறிய குடும்பங்களுக்கான 2ம் கட்டமாக 189 குடும்பங்களுக்கு 500/= உணவு வெளச்சரும் 363 குடும்பங்களுக்கு 1,000/= உணவு வெளச்சரும் வழங்கியமை.

காரைதீவு அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் சமூகம்

Scanned with CamScanner

காரைதீவு அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் சமூகம்

தரம் 05

மாணவர்களுக்கான விடுமுறைகால செயற்றிட்டம்

முதலாந் தவணை மதிப்பீட்டுப் பரீட்சை – 2020

பாடம் : தாய் மொழி தமிழ்

வ. துஷ்யந்தன்(JP),BEd
(Dip.in.teach- primary merit)

பெயர் :- ..... நேரம் :-1. 30 மணித்தியாலம்

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.

01) பின்வரும் பந்தியை வாசித்து கேட்கப்படும் வினாக்களுக்கு பந்தியிலிருந்து தெரிவு செய்து விடை எழுதுக.

இன்று உலகளாவிய ரீதியில் பிளாஸ்டிக், பொலித்தீன் பாவனை அதிகரித்துள்ளது பிளாஸ்டிக்கைத் தமிழில் "நெகிழி' என்பர். இவை பன்முகப் பாவனை உடையவை. மலிவானவை, நீண்டகாலம் பாவிக்கக் கூடியவை. இவை போன்ற காரணங்களால் அதிகமானோர் பயன்படுத்துகின்றனர். இதனால் சூழல் வேகவாக மாசடைகின்றது. இதுமட்டுமன்றி பொலித்தீன்களை தாம் உண்ணும் உணவுகளோடு மிருகங்களும் பறவைகளும் சேர்த்து உண்பதால் இவை அழிவடைந்து வருகின்றன. இவற்றை எரிப்பதால் சூழல் மாசடைந்து ஓசோன் படலமும் பாதிப்படைகின்றது. ஆகவே நாம் வாழும் சூழலை பொலித்தீன், பிளாஸ்டிக் அற்றதாக பாதுகாப்பது எமது கடமையாகும்.

1) 'ஆகாரம்' என்பதன் ஒத்த கரத்துச் சொல் எது? .....

2) பிளாஸ்டிக்கைத் தமிழில் எவ்வாறு அழைப்பர்? .....

3) பந்தியிலுள்ள அ.ிணைப் படர்க்கைப் பன்மைச் சொல் எது? .....

4) இதிலுள்ள இடப் பெயர் ஒன்றை எழுதுக? .....

5) பாதிப்டைகின்றன என்பதனைப் பிரித்து எழுதுக? .....

6) பொலித்தீனை மக்கள் ஏன் விரும்பி பாவிக்கின்றனர்? .....

7) உயர்திணை, தன்மை, பன்மைப் பெயர்ச் சொல் ஒன்றினை எழுதுக? .....

8) அ.ிணை, நிகழ்கால, ஒருமை வினைச் சொல் ஒன்றினை எழுதுக? .....

02) இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

1) நான் ..... ஊடாக ஆற்றைக் கடந்தேன். (பாலத்தின், பாளத்தின்)

2) நாங்கள் தங்கப் ..... கண்டோம். (பாலங்கள், பாளங்கள்)

3) நாங்கள் ..... உள்ள பிரதேசத்திற்கு சென்றோம்.(மழைகள், மலைகள்)

4) அந்த மரத்தில் ஒரு சிறிய ..... உள்ளது. (கோறை, கோரை)

03) ஒத்தகருத்து சொல் எழுதுக.

1) பாதை - ..... 2) மட்டற்ற - .....

KDPS

Scanned with CamScanner

3) கீர்த்தி - ..... 4) குறி - .....

5) பரிவு - ..... 6) படை - .....

04) எதிர்க்கருத்து சொல் எழுதுக.

1) ஐக்கியம் - ..... 2) இம்மை - .....

3) போலி - ..... 4) நிறைவு - .....

05) எதிர்ப்பாற் சொல் எழுதுக.

1) புதல்வன் - ..... 2) இளைஞன் - .....

3) வீரன் - ..... 4) விதவை - .....

06) சொற்களைச் சேர்த்து எழுதுக.

1) பால் + குடம் - ..... 2) மக்கள் + பேறு - .....

3) கண் + புலம் - ..... 4) முன் + செடி - .....

07) பின்வரும் பேச்சு வழக்குச் சொற்களை எழுத்து வழக்குச் சொற்களாக மாற்றி எழுதுக.

01) தலகணி - ..... 02) கைமாறு - .....

03) வேர்வை - ..... 04) சீயக்காய் - .....

08) கீழுள்ள பழமொழிகளைப் பூரணப்படுத்துக.

1) ஒறுத்தார்க்கு ஒரு ..... பொறுத்தார்க்கு

..... துணையும் புகழ்.

2) உள்ளத்தால் ..... தொழுகின் உலகத்தார்

..... ளெல்லாம் உளன்.

09) பின்வரும் வாக்கியங்களிலுள்ள எழுவாய், பயனிலை, செயற்படுபொருள் என்பவற்றை எழுதுக.

1) மேரி சிறுகதை எழுதினாள்.

எழுவாய் - ..... பயனிலை ..... செயற்படுபொருள் .....

KDPS

Scanned with CamScanner

10) பொருத்தமான நிறுத்தற் குறிகளை இடுக.

1) ஆதவன் ஓவியம் வரைகிறான்

2) கிராமங்கள் அழகானவையா

3) எவ்வளவு பெரிய சிலை

4) வாய்ப்பு என்ற சொல் எதனைக் குறிக்கின்றது

11) பின்வரும் பெயர்ச் சொற்கள் எவ்வகைப் பெயர்ச் சொற்கள் என எதிரே எழுதுக.

1. கண் - ..... 2. கதிரை - .....

3. சித்திரை - ..... 4. அன்பு - .....

5. கீரிமலை - ..... 6. படித்தல் - .....

12. கீழுள்ள பாடலைப் பூரணப்படுத்தி இடைவெளியை நிரப்புக.

1. கோல மயிலின் கூத்தைக் கண்டு

.....

கொப்புக் கொப்பாய்த் தாவிப் பாய்ந்து

.....

2. ..... – எனும்

எதிர்மறைப் பேச்சை விட்டுவிடு!

..... – எனும்

ஏற்ற கேள்வி கேட்டுவிடு!

KDPS

13) 2.4 பின்வரும் வாக்கியங்கள் உயர்திணையா? அஃறிணையா? என இடைவெளியில் எழுதுவோம்.

1. அரசன் நீதி தவறாது நாட்டை ஆட்சி செய்தான்.....
2. ஆகாய விமானம் வானத்தில் அழகாகப் பறந்தது. .....
3. நியூட்டன் புவியீர்ப்பு விசையைக் கண்டுபிடித்தார். .....
4. கிளிகள் சுவையான பழங்களைக் கொத்தித் தின்றன. .....
5. வீதியில் வாகனங்கள் வரிசையாகச் சென்றன. .....

Scanned with CamScanner

14) பின்வரும் தகவல்கள் அறிவுறுத்தலா? அறிவித்தலா? என எழுதுக.

1) சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

.....


2) நாளை பெற்றோருக்கான கூட்டம் நடைபெறும்.

.....

3) கத்தரிக்கோலால் கடதாசியை இரு பகுதிகளாக வெட்டுக.

.....

15) கீழுள்ள படத்தினை அவதானித்துப் பொருத்தமான வாக்கியங்கள் மூன்று எழுதுக.



1. .....

.....

2. .....

.....

3. .....

.....

Scanned with CamScanner

காரைதீவு அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் சமூகம்

தரம் 05

மாணவர்களுக்கான விடுமுறைகால செயற்றிட்டம்

முதலாந் தவணை மதிப்பீட்டுப் பரீட்சை – 2020

பாடம் : சுற்றாடல் சார் செயற்பாடு

வ. துஷ்யந்தன்(JP),BEd
(Dip.in.teach- primary merit)

பெயர் :- ..... நேரம் :-1. 30 மணித்தியாலம்

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.

01. பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1. எமக்கு நல்ல அறிவுரைகளைக் கூறுபவர்களில் முக்கியமான ஒருவர்.
   1) ஆசிரியர் 2) சாரதி 3) வைத்தியர் 4) பொலிஸ்காரர்

2. பாடசாலையில் நீங்கள் மகிழ்ச்சியடையும் சந்தர்ப்பங்களில் ஒன்று.
   1) உணவு உண்ணும் போது 2) பாடசாலை விட்டு வீடு செல்லும் போது
   3) ஆசிரியர் பாராட்டும் போது 4) பாடசாலை இடைவேளையின் போது

3. எமது ஆரோக்கிய வாழ்விற்கு மிகவும் அவசியமானது.
   1) பொருத்தமான உடற் தகைமை 2) பாடசாலை விட்டு வீடு செல்லும் போது
   3) நீண்ட நேரம் நித்திரை செய்தல் 4) பொய் கூறுதல

4. சட்டதிட்டங்களைப் பேணி நடப்பதால் கிடைப்பது.
   1) தண்டனை 2) மனமகிழ்ச்சி
   3) தோல்வி 4) பாராட்டு

5. ஆக்கிரமிப்பு நடத்தை காரணமாகத் தோன்றக் கூடியது.
   1) மனமகிழ்ச்சி 2) முரண்பாடு
   3) நடுநிலைத் தன்மை 4) பரிசில் கிடைத்தல்

6. உள்ளத்தை இதப்படுத்தும் செயற்பாடுகளின் நான்காவது படிமுறை எது?
   1) மலர்வு 2) உடலைத் தளர்த்தல்
   3) உள்ளத்தைத் தளர்த்தல் 4) பிரார்த்தனை

7. தேசிய கீதம் பாடும் போது நிற்க வேண்டிய நிலை.
   1) தலை குனிந்து நிற்றல் 2) இலகுவாக நிற்றல்
   3) கவனமாக நிற்றல் 4) கண்களை மூடி நிற்றல்

8. முதன் முதல் ஒலிம்பிக் பதக்கம் வென்று சர்வதேச ரீதியில் இலங்கைக்குப் புகழ் தேடிக் கொடுத்த வீரர்.
   1) சுசந்திகா ஜயசிங்க 2) டங்கன் வைற்
   3) தமயந்தி தர்ஷா 4) அர்ஜுணா ரணதுங்க

9. இலங்கையின் தேசியக் குறியீடுகளில் ஒன்று
   1) சிகிரியா ஓவியம் 2) தேசியக் கொடி
   3) அரசிலை 4) தர்மச் சக்கரம்

10. எமது நாட்டுக்கே உரித்தான விலங்கு.
    1) பசு 2) யானை 3) புலி 4) சருகுமான்

11. இலங்கையில் உலக மரபுரிமையாகக் கணிக்கப்பட்டுள்ளவற்றுள் ஒன்று.
    1) கதிர்காமக் குன்று 2) யாழ் கோட்டை
    3) மகாவலி கங்கை 4) சிகிரியாக் குன்று

KDPS

Scanned with CamScanner

12. இந்துக்களின் பண்டைய சிவன் கோயில் காணப்படும் இடம்.
1) கதிர்காமம் 2) பொலன்னறுவை
3) அனுராதபுரம் 4) மாத்தளை

13. இலங்கையில் அதிக ஆதிவாசிகள் வசிக்கும் இடம்.
1) விந்தானை 2) தம்பானை
3) மட்டக்களப்பு 4) திம்புலாகல

14. சுதந்திர இலங்கையில் முதல் உரையை நிகழ்த்திய பிரதமர்.
1) வில்லியம் கோபல்லாவ 2) வண.எஸ்.மகிந்த
3) டீ.எஸ்.சேனாநாயக்க 4) ரணில் விக்கிரமசிங்க

15. பிரதேசத்தின் குப்பை கூளங்களை அகற்றி சூழலைச் சுத்தம் செய்யும் நிறுவனம்.
1) பிரதேச சபை 2) பிரதேச செயலகம்
3) தேர்தல் திணைக்களம் 4) வீதி அபிவிருத்தி அதிகார சபை

16. காற்றில் மிதந்து சென்று பரம்பலடையும் வித்து.
1) புலிநகம் 2) எரிக்கலை 3) காசித்தும்பை 4) மஞ்சாடி

17. தமக்கு ஆபத்து என்று உணர்ந்தவுடன் உடலை வளையமாகச் சுருட்டுவது.
1) பூரான் 2) ஆமடில்லா 3) மரவட்டை 4) ஆமை

18. பச்சை நிறத்தில் காணப்படும் பூச்சி.
1) நுளம்பு 2) கும்பிடு பூச்சி 3) [illegible] 4) மின்மினிப் பூச்சி

19. விறகு பிளப்பதற்கு உதவும் உபகரணம்.
1) கோடரி 2) அரிவாள் 3) [illegible]ண்வெட்டி 4) வாச்சு

20. நீரூற்றுக்களைப் பாதுகாக்க வளர்க்க வேண்டிய மரம்.
1) மருதமரம் 2) தேக்கு 3) பனை 4) மாமரம்

21. காபோவைதரேற்று அதிகம் அடங்கியுள்ள உணவு வகை.
1) முட்டை 2) கருவாடு 3) ஈரப்பலா 4) வல்லாரை

22. புரதக் குறைபாட்டால் ஏற்படும் நோய்.
1) மாலைக்கண் 2) வளர்ச்சி குன்றுதல்
3) பற்கள் சிதவடைதல் 4) உடல் பொலிவிழத்தல்

23. கல்சியம் அதிகம் அடங்கியுள்ள உணவு வகை.
1) நெத்தலி 2) நிலக்கடலை 3) தோடை 4) மரவள்ளி

24. Covid -19 வைரஸ் 2020 இல் எந்த நாட்டில் முதன்முதலில் தனது தாக்கத்தை ஏற்படுத்தியது.
1) இத்தாலி 2) சீனா 3) இலங்கை 4) அமெரிக்கா

02. சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் அடைப்பினுள் எழுதுக.

1. எல்லோருடனும் புன்னகை பூத்த முகத்துடன் பேச வேண்டும். (.....)

2. முகபாவனை மூலம் ஒருவரின் மனநிலையை அறிந்து கொள்ளலாம். (.....)

KDPS

Scanned with CamScanner

3. விளையாட்டு மைதானம் இல்லா விட்டால் வீதியில் விளையாடலாம். (.....)

4. தற்காலத்தில் நகரமாக்கல் காரணமாக மக்களின் வாழ்க்கை சிக்கல் நிறைந்ததாகக் காணப்படுகின்றது. (.....)

5. நற்காரியங்களுக்குச் செல்லும் போது பெற்போர்களின் கால்களைத் தொட்டு வணங்குதல் சிங்களவரின் பழக்கமாகும். (.....)

6. தியானச் செயற்பாடு செய்வதால் பதற்றம் மற்றும் மனஅழுத்தம் ஏற்படும். (.....)

7. சர்வதேச மாநாடு ஒன்றில் பங்குபற்றும் நபர் ஒருவர் தனது தாய் மொழியில் மட்டும் உரையாற்ற வேண்டும். (.....)

8. கருங்கல் மூலம் சிலைகள், சிற்பங்கள் செதுக்குவதில்லை. (.....)

9. அரச நிறுவனங்களிடமிருந்து சேவைகளைப் பெறுமு போது கையூட்டல் கொக்க முனைவது தண்டனைக்குரிய குற்றமாகும். (.....)

10. சோளம் தாள்கள் வலையுருவான நரம்பமைப்பைக் கொண்டது. (.....)

11. முதிர்ந்த பலா இலை கடும் பச்சை நிறமாக காணப்படும். (.....)


12. கொம்பு ஒணான் இலங்கைக்கே உரித்தான ஒரு ஊர்வன ஆகும். (.....)


13. பொதுச் சொத்துக்களைத் தனிப்பட்ட தேவைகளுக்குப் பயன்படுத்தலாம். (.....)


14. பொதியிடப்படாத சீனியின் விலையை விட பொதியீடப்பட்ட சீனியின் விலை அதிகமாகும். (.....)


15. உணவுப் பொருட்களைச் சூடாக்கும் போது விற்றமின் - C சேர்ப்பதைத் தவிர்த்தல் வேண்டும். (.....)

03) பின்வரும் சூரிய நமஷ்கார நிலைகள் எத்தனையாம் நிலை என எதிரே எழுதுக.

1.  (.....)

2.  (.....)

3.  (.....)

4.  (.....)

KDPS

Scanned with CamScanner

04) சுருக்கமான விடை எழுதுக.

1. நடுநிலையான நடத்தைகளின் பண்புகள் இரண்டு எழுதுக?

   1. ……..... 2. ……

2. குறைவான நீர் அருந்துவதால் ஏற்படும் பாதிப்புக்கள் இரண்டு எழுதுக?

   1. …… 2 ……....

3. இலங்கையின் தேசியக் கொடியில் காணப்படும் நிறங்கள் யாவை?

   1. …….. 2. ……

   3. …….. 4. ……

4. இலங்கைக்கே உரித்தான தாவரங்கள் இரண்டு எழுதுக?

   1. …….. 2. ……

5. இலங்கையில உள்ள உலக மரபுரிமைகள் இரண்டு எழுதுக?

   1. …… 2. ……

6. சிலோன் நசனல் ரிவீங் எனும் பத்திரிகையின் ஆரம்ப கால ஆசிரியர் யார்?

   ……

7. சமாந்தர நரம்பைக் கொண்ட இலைகள் இரண்டு எழுதுக?

   1. …….. 2. ……

8. நீரின் மூலம் பரம்பலடையும் வித்துக்கள் இரண்டு எழுதுக?

   1. …….. 2. ……

9. ஊர்வனவற்றுள் அடங்கும் விலங்குகள் நான்கு எழுதுக?

   1. …… 2. …… 3. …… 4. ……

10. விவசாய அலகில் காணப்படும் உபகரணங்கள் இரண்டு எழுதுக?

    1. …….. 2. ……

11. உடலை நோயிலிருந்து பாதுகாக்கும் உணவுகள் இரண்டு எழுதுக?

    1. …… 2. ……

12. உணவு நஞ்சடையும் சந்தர்ப்பங்கள் இரண்டு எழுதுக?

    1. …… 2. ……

KDPS

Scanned with CamScanner

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடமாகாணம்

பயிற்சிப் பரீட்சை - பெப்ரவரி 2020

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான வழிகாட்டல்.

2

வினாத்தாள் - I

45 நிமிடம்

சுட்டெண் : .....

பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்கான அறிவுறுத்தல்கள்.

- உங்கள் சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள் இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்.
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும், உங்கள் சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே தருக.
- 1தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் கீழே தரப்பட்டுள்ள மூன்று விடைகளிலிருந்து சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற சரியான புள்ளிகளின் எண்ணிக்கை
02	
03	
04	
05	
06	
இறுதிப் புள்ளிகள்	
[ ] x $2\frac{1}{2}$ = [ ] புள்ளிகள்	
எழுத்தில்	


	பெயரும் ஒப்பமும்
முதலாவது பரீட்சகர் (வகுப்பாசிரியர்) புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகிறேன்.	..... பெயர் ..... ஒப்பம்
இரண்டாவது பரீட்சகர் (.....) முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகிறேன்.	..... பெயர்
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகிறேன்.	..... பெயர் ..... ஒப்பம்
அதிபர் மேற்பார்வை செய்தேன்	
வலய / மாகாண மேற்பார்வையாளர்	


Scanned with CamScanner


வினாத்தாள் I

1 ஆம், 2ஆம் வினாக்களில் ஓர் உரு ஏனைய இரு உருக்களிலிருந்து வேறுபடுகின்றது அதனைத் தெரிவு செய்க.


01.


1. 


2. 

3. 


02.

1. 

2. 

3. 

கீழ் உள்ள படத்தை அவதானித்து விடை தருக.



A B C D E F

03. வீட்டுச் சூழலில் வாழும் பிராணி

1. Aயும் Bயும் 2. Eயும் Fயும் 3. Aயும் Dயும்

04. ஒத்த இயல்புடைய பிராணிகளின் கூட்டம்

1. Bயும் Eயும் 2. Aயும் Fவும் 3. Cயும் Dயும்

ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாத சொற்கள் இடம் பெறும் அடைப்பைத் தெரிவு செய்க.

05.

1. அன்னாசி பப்பாசி பழங்கள்

2. அதிபர் ஆசிரியர் மாணவர்

3. உடுக்கு தபேலா மிருதங்கம்

06.

1. நேத்திரம் விழி நயனம்

2. இரக்கம் பரிவு காருண்யம்

3. ஏர் வயல் விவசாயம்

07. விருந்துபசாரம் என்னும் சொல்லில் உள்ள சில எழுத்துக்களைக் கொண்டு ஆக்கத்தக்க சொல் எது?

1. சாந்தி 2. பருந்து 3. விருந்தோம்பல்

Scanned with CamScanner

சுட்டெண்.....

தரப்பட்ட விடயங்களை வாசித்து 08ஆம் 09ஆம் வினாக்களுக்கு விடைகளைத் தெரிவு செய்க.

மாலாவும் தசனியும் கோழி வளர்க்கிறார்கள். மதுவும் சாந்தியும் புறா வளர்க்கிறார்கள். தசனியும் சாந்தியும் ஆடு வளர்க்கிறார்கள்

08. கோழியையும், ஆட்டையும் வளர்ப்பவர் யார்?
1. மாலா 2. சாந்தி 3. தசனி

09. புறாவையும் ஆட்டையும் வளப்பவர் யார்?
1. சாந்தி 2. மாலா 3. மது

10. ஒவ்வொரு திண்மத்திலும் உள்ள உச்சிகளின் எண்ணிக்கை படிப்படியாக கூடிச் செல்லும் ஒழுங்குமுறையில் எழுதப்பட்டுள்ள விடை
1. கூம்பு - சதுரமுகி - நான்முகி - அரியம் 2. நான்முகி - கூம்பு - அரியம் - சதுரமுகி
3. கூம்பு - நான்முகி - அரியம் - சதுரமுகி

11. 1 தொடக்கம் 20 வரையுள்ள உரோம எண்களுள் ஐந்து தீக்குச்சிகளைப் பயன்படுத்தி ஆக்கத்தக்க உரோம எண்கள் எத்தனை?
1. 5 2. 4 3. 8

12. ஒரு மே மாதத்தின் இறுதி நாள் திங்கட்கிழமை எனின், அம்மாதத்தில் உள்ள சனிக்கிழமை யினதும், வெள்ளிக்கிழமையினதும் எண்ணிக்கைகள் முறையே?
1. 5, 5 2. 5, 4 3. 4, 4

13. செந்தில் குறித்த ஒரு எண்ணை நினைத்தான். அவ்வெண்ணுடன் 2 ஐக் கூட்டி வருகின்ற விடையை 4ஆல் பெருக்கிய போது பெறப்படும் விடையானது 50இல் இருந்து 2ஐக் கழித்து வரும் விடைக்குச் சமன் எனின் செந்தில் ஆரம்பத்தில் நினைத்த எண் யாது?
1. 6 2. 48 3. 10


14. V, P, Z, X, O மேற்படி எழுத்துக்களை தளவாடியில் பார்க்கும் போது மாற்றம் எதுவும் இன்றித் தெரியும் எழுத்துக்கள்?
1. V, X, O 2. P, V, O 3. Z, O, X


தரப்பட்ட வாக்கியங்களை வாசியுங்கள்

Q- எமது நண்பர்களும் வந்திருந்தனர்.
R- நிலா ஒளியில் நாம் அனைவரும் விளையாடினோம்.
S- எமக்கு நிலாவைப் பார்ப்பதற்கு ஆசையாக இருந்தது.
T- அன்று பௌர்ணமி தினம்.

15. மேற்படி வாக்கியங்களை ஒரு சம்பவமாக ஒழுங்குபடுத்தினால்
1. SORT 2. SQTR 3. TQSR

16.  பக்கங்கள் குறிக்கப்பட்ட தாயக்கட்டை விரித்து வைக்கப்பட்டுள்ளது அத்தாயக்கட்டையின் சரியான தோற்றத்தைக் குறிக்கும் தாயக்கட்டை எது?



1. 
2. 
3. 

Scanned with CamScanner


17. 20 இற்கு முன்னால் வரும் எண்ணையும் 40 இற்குப் பின்னால் வரும் எண்ணையும் கூட்டி வரும் எண்ணானது பின்வரும் எந்த எண்ணிற்கு முன்னால் வரும் எண்ணாகும்?



1. 60 2. 61 3. 59

18. சுகந்தி தனது தங்கையைப் பார்த்து கூறிய கூற்றுக்களிடையே மிகச் சரியான கூற்றைத் தெரிவு செய்க.

1. இவர் எனது தந்தையின் தங்கையின் மகள் ஆவார்.
2. இவர் எனது தாயின் தந்தையின் மகள் ஆவார்.
3. இவர் எனது தாயின் மகளின் சகோதரியாவாள்.

19. செவ்வக வடிவகக் கடதாசி இருமுறை மடிக்கப்பட்டு பின் நிறந்தீட்டப்பட்ட பகுதி வெட்டி நீக்கப்பட்ட பின் விரித்த போது தெரியும் தோற்றத்தைத் தெரிவு செய்க.



1. 
2. 
3. 

20. சிந்து, சங்கவி, கீர்த்தி ஆகியோர் ஒட்டப்போட்டியொன்றில் ஓடிக்கொண்டிருந்தனர். இறுதியாக சிந்து சங்கவிக்கு முன்னாலும், கீர்த்தி சிந்துவுக்கு முன்னாலும் ஓடினாள். எனின் இப்போட்டியில் முன்னே சென்றவர் யார்?

1. சிந்து 2. சங்கவி 3. கீர்த்தி




21. கடிகாரம் ஒன்றில் மணித்தியால முள்ளும் நிமிட முள்ளும் செங்கோணத்தினை விடப் பெரியதாக அமைந்துள்ள நேரம்?

1. 5.05 மணி 2. 5.30 மணி 3. 5.15 மணி

22. ஒரு பிள்ளை கடைக்குச் சென்று 40 நீல நிற பலூன்களும், அதை விட 12 கூடுதலாக மஞ்சள் நிற பலூன்களும் மஞ்சள் நிற பலூன்களை விட 24 குறைவாக சிவப்பு நிற பலூன்களும் வாங்கியது. அதன்படி அப்பிள்ளை வாங்கிய மொத்த பலூன்கள் எத்தனை?

1. 108 2. 120 3. 76

23. கனவுருவை அமைக்கத்தக்க உருவினைத் தெரிவு செய்க.

1. 
2. 
3. 

24. ஒரு வரிசையில் விமலிற்கு முன்னால் 9 பிள்ளைகளும் விமலிற்குப் பின்னால் 15 பிள்ளைகளும் நின்றனர். அதன்படி, வரிசையில் சரிநடுவே நிற்பது வரிசையின் முதலிலிருந்து எத்தனை ஆவது பிள்ளை?

1. 16 ஆவது பிள்ளை 2. 19 ஆவது பிள்ளை 3. 13 ஆவது பிள்ளை

25. பின்வரும் வாக்கியத்தில் சரியாக எழுத்துக் கூட்டப்பட்டுள்ள வாக்கியத்தை தெரிவு செய்க.

1. நண்பர்கள் ஒலித்துப் பிடித்து விளையாடினார்கள்
2. நண்பர்கள் ஒளித்துப்பிடித்து விளையாடினார்கள்
3. நண்பர்கள் ஒழித்துப்பிடித்து விளையாடினார்கள்

Scanned with CamScanner

26. எண்கள் எழுதப்பட்டுள்ள முறைக்கு ஏற்ப வெற்றிடங்கள் A, B ஆகியவற்றில் வரவேண்டிய எண்களை முறையே காட்டும் விடையைத் தெரிவு செய்க.

79 → 16 → 7

86 → 14 → 5

58 → A → B

1. 12, 3 2. 13, 4 3. 10, 4

27. ஒரு புகைவண்டி 26km கல்லில் இருந்து 30வது km கல்லைக் கடப்பதற்கு 8 நிமிடம் எடுத்தது புகைவண்டி அதே கதியில் சென்றால் முதலாவது கல்லில் இருந்து 45km கல்லைக் கடப்பதற்கு எவ்வளவு நிமிடங்கள் எடுக்கும்.

1. 90 நிமிடங்கள் 2. 38 நிமிடங்கள் 3. 30 நிமிடங்கள்


28. P நகருக்கும் Q நகருக்கும் நடு மத்தியில் R நகரம் அமைந்திருப்பதுடன் R நகருக்கும் Q நகருக்கும் நடு மத்தியில் S நகரம் அமைந்துள்ளது. S நகருக்கும் Q நகருக்கும் இடையிலான தூரம் 8km ஆயின் P நகருக்கும் Q நகருக்கும் இடையிலான தூரம் எவ்வளவு?

1. 24km 2. 36km 3. 32km

29. கடற்கரையில் சூரிய உதயத்தைப் பார்த்து இரசித்த சுதன் தனது இடது கைப்பக்கம் திரும்பி நடந்தான். அவன் தற்போது நடந்து செல்லும் திசை?

1. வடக்கு 2. தெற்கு 3. மேற்கு

30. A இலிருந்து B வரை செல்லும் போது செங்கோணமாக வலப்பக்கம் எத்தனை முறை திரும்பிச் செல்வார்?



1. 13 2. 5 3. 7

31. பெட்டியொன்றில் 8 பந்துகள் உள்ளன. பிள்ளையொன்று ஐந்து நிமிடங்களுக்கு ஒருமுறை ஒரு பந்து வீதம் பெட்டியிலிருந்து வெளியே எடுத்தது. அதன்படி, அப்பிள்ளைக்குச் சகல பந்துகளையும் பெட்டியிலிருந்து வெளியே எடுப்பதற்கு எடுத்த நேரம்,

1. 40 நிமிடங்கள் 2. 45 நிமிடங்கள் 3. 35 நிமிடங்கள்

32. பாடசாலையின் கண்காட்சி 2020 ஆம் ஆண்டு பெப்ரவரி 26 ஆம் திகதி தொடக்கம் மார்ச் 4 ஆம் திகதி வரை நடைபெற்றது. எனின் கண்காட்சி நடைபெற்ற நாட்கள் எத்தனை?

1. 7 நாட்கள் 2. 8 நாட்கள் 3. 6 நாட்கள்

33. 30 தொடக்கம் 35 வரையுள்ள எண்ணும் எண்களை எழுதும் போது இலக்கம் 3 எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை?

1. 5 2. 7 3. 6

34. துக்கத்திற்கு கறுப்பு என்பது போல சமாதானத்திற்கு

1. வெள்ளை 2. சிவப்பு 3. பச்சை


Scanned with CamScanner

35. கல்விச் சுற்றுலா சென்ற போது அபிசனாவை விட ரூபி அதிகபணம் வைத்திருந்தாள். ஆயினும் சாருகா வைத்திருந்த அளவு பணம் ரூபியிடம் இருக்கவில்லை. இவர்களில் குறைந்தளவு பணம் வைத்திருந்தவர் யார்?

1. அபிசனா 2. ரூபி 3. சாருகா

36. "நாற்பத்து ஆறாயிரத்து முந்நூற்று இருபத்து எட்டு" என்னும் எண்ணில் இடம்பெறும் இரட்டை இலக்கங்களை மாத்திரம் பெறுமதி குறைந்து செல்லும் முறையில் எழுதினால் கிடைப்பது?




1. 2468 2. 8643 3. 8642

37. 

இக்குறியீடுகள் 10இற்கும் குறைந்த எண்களைக் காட்டுகின்றன. அதன்படி சதுரவடிவக் குறியீட்டுக்குப் பொருத்தமான எண்?

1. 2 2. 6 3. 4


38. பின்வரும் உருக்களுள் முழு உருவின் $\frac{1}{5}$ ஐ சரியாக நிழற்றக்கூடிய உருவைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.




1.  2.  3. 

39. 40m நீளமான நடா இரண்டாக மடிக்கப்பட்டு அது மீண்டும் இரண்டாக மடிக்கப்படுகிறது. பின்னர் அம் மடித்த துண்டு நடுவே இருபகுதியாக வெட்டப்படுகிறது. எனின் கிடைக்கும் துண்டுகளின் எண்ணிக்கை யாது?

1. 10m ஆன 4 துண்டுகள்
2. 5m ஆன 8 துண்டுகள்
3. 5m நீளமான 2துண்டுகள், 10m நீளமான 3துண்டுகள்

40. தரப்பட்டுள்ள உருவை A திசை வழியாகப் பார்க்கும் போது தோன்றும் விதம்?

A → 

1.  2.  3. 

Scanned with CamScanner

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடமாகாணம்
பயிற்சிப் பரீட்சை - பெப்ரவரி 2020

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான வழிகாட்டல்.

2

வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண் : .....

பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்கான அறிவுறுத்தல்கள்.

- உங்கள் சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள் இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்.
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும், உங்கள் சுட்டெண்ணை எழுதுக.
- எல்லா வினாக்களுக்கும் அறிவுறுத்தலுக்கு ஏற்ப உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே எழுதுக.
- நான்கு விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
- விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	பெயரும் ஒப்பமும்
முதலாவது பரீட்சகர் (வகுப்பாசிரியர்) புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகிறேன்.	..... பெயர் ..... ஒப்பம்
இரண்டாவது பரீட்சகர் (.....) முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகிறேன்.	..... பெயர்
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகிறேன்.	..... பெயர் ..... ஒப்பம்
அதிபர் மேற்பார்வை செய்தேன்	
வலய / மாகாண மேற்பார்வையாளர்	

Scanned with CamScanner

வினாத்தாள் II

01. பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடைகளைப் பாடலில் இருந்து தெரிந்து எழுதுக.

சின்னஞ் சிறுவில்லாய் கண்டதம்மா - பின்னர்ச்
செம்பொற் குடம்போல தோன்றுதம்மா
என்ன அதிசயம் பாராயம்மா - ஈதோர்
இந்திர சாலமோ கூறாயம்மா

வளர்ந்து வளர்ந்து பெருகுதம்மா - உடல்
வட்டந் திருந்தி வருகுதம்மா
தளர்ந்து தளர்ந்து பின் போகுதம்மா - கண்ணிற்
சற்றுந் தெரியாமல் ஆகுதம்மா.

1. மேனி என்பதன் ஒத்தகருத்துச் சொல்லினை எழுதுக? (.....)
2. அடுக்குமொழிச்சொல் ஒன்று எழுதுக? (.....)
3. அடுக்கிடுக்குத் தொடர் ஒன்று எழுதுக? (.....)
4. உவமைத் தொடர் ஒன்று எழுதுக? (.....)
5. தேய்ந்து என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லினை எழுதுக? (.....)
6. பொற்குடம் என்னும் சொல்லினைப் பிரித்து எழுதுக? (.....)

02. அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களிலிருந்து பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்து புள்ளிக் கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்க.

1. ஒளியைப் பரப்புவது ..... (விளக்கு, விலக்கு)
2. நீடூழி காலம் ..... (வாள்க, வாழ்க)
3. ஆழம் ..... காலை விடாதே. (அரியாமல், அறியாமல்)
4. மக்களுக்குச் சேவை செய்வது மிகச் சிறந்த ..... ஆகும். (பனி, பணி)
5. ..... செய விரும்பு. (அரம், அறம்)

03. பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் எழுதுக.

1. "நண்பர்கள்" என்பது உயர்திணை ஒருமைப் பெயர்ச்சொல்லாகும். (.....)
2. "புத்தகம்" என்பது அ.்றிணை ஒருமைப் பெயர்ச்சொல்லாகும். (.....)

04. கீழே தரப்பட்டுள்ளவற்றிற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

(நாம், பந்துகள், நான், பிள்ளைகள்)

1. உயர்திணை பன்மைப் படர்க்கைப் பெயர்ச் சொல் : .....
2. உயர்திணை ஒருமை தன்மைப் பெயர்ச் சொல் : .....

Scanned with CamScanner

சுட்டெண்.....

05. கீழே தரப்பட்டுள்ள இறந்தகால வாக்கியங்களை நிகழ்கால வாக்கியங்களாக மாற்றி எழுதுக.

1. நான் ஒரு கவிதை எழுதினேன்.

   .....

2. புறாக்கள் பறந்து சென்றன.

   .....

06. சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க்கோடிடுக.

1. ஆராச்சி, ஆராய்ச்சி, ஆராட்சி, ஆராய்சி

2. நட்ச்சத்திரம், நட்சத்திரம், நச்சத்திரம், நட்சத்திறம்

07. வெற்றிடத்திற்குப் பொருத்தமான வினைச் சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

1. நான் எனது தங்கையுடன் பாடசாலைக்குச் ..... (சென்றேன், சென்றோம்)

2. சிறந்த நூல்கள் நல்ல நண்பர்களைப் ..... (போன்றது, போன்றன)

08. பின்வரும் தொடர்களுக்குரிய தனிச் சொல்லை எழுதுக.

1. வீண் செலவு செய்பவன் : .....

2. நம்பமுடியாத கதை : .....

09. கீழே தரப்பட்டுள்ள சுருக்கக் குறியீடுகளுக்கான விரிவினை எழுதுக.

1. பி.கு .....

10. ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலப் பெயரை ஆங்கில எழுத்துக்களிலே எழுதுக.

1. 

   .....

2. 

   .....

11. பின்வரும் சொற்களின் தமிழ்ச் சொல்லினை எழுதுக.

    i. Crow : ..... ii. Flowers : .....

12. பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

    i. Silence Please : ..... ii. May I Come in? : .....

Scanned with CamScanner

13. பின்வரும் சொற்களின் சிங்கள உச்சரிப்பை எழுதுக.

i. புத்தகம் :..... ii. கிளி : .....

14. பின்வரும் சிங்களச் சொற்களின் தமிழ்க் கருத்தை எழுதுக.

i. விஸ்ஸ : ..... ii. சந்துதா : .....

சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

15. மனதை ஒரு நிலைப்படுத்தும் தியானச் செயற்பாட்டின் நான்காம் படிநிலை?

1. உள்ளத்தைத் தளர்த்தல் 2. மலர்வு
3. மனவுறுதி 4. பிரார்த்தனை

16. தேசியக் கொடியில் செம்மஞ்சள் நிறப்பட்டி குறித்து நிற்பது?

1. சிங்கள மக்கள் 2. தமிழ் மக்கள் 3. முஸ்லிம் மக்கள் 4. ஒற்றுமை

17. தேசிய இலட்சினையில் சௌபாக்கியத்தைக் குறிப்பது

1. தர்மச்சக்கரம் 2. நெற்கதிர் 3. நிறைகுடம் 4. சூரியன், சந்திரன்

18. இலங்கையில் தற்போது சாதாரண தபாலுக்கு ஒட்டவேண்டிய முத்திரையின் பெறுமதி

1. ரூபா 10.00 2. ரூபா 45.00 3. ரூபா 15.00 4. ரூபா 10.00

19. பாலை, வீரை மரங்கள் பூக்கும் மாதம் எது?

1. ஆடி 2. புரட்டாதி 3. பங்குனி 4. வைகாசி

20. பின்வருனவற்றுள் ஒளடதமாகப் பயன்படுத்தும் தாவரப்பூ

1. பொன்னாவரைப்பூ 2. அல்லிப் பூ 3. மல்லிகைப்பூ 4. தாமரைப்பூ

21. பின்வருனவற்றுள் உளி பயன்படுத்தப்படும் தொழில்

1. விவசாயம் 2. மேசன்வேலை 3. மரவேலை 4. கடற்றொழில்

22. உணவை நீண்ட காலம் பேணுவதற்குப் பயன்படுத்தப்படும் பாரம்பரிய முறை அல்லாதது?

1. உலர்த்துதல் 2. மணலினுள் புதைத்தல்
3. புகையூட்டல் 4. குளிரூட்டியில் வைத்தல்

23. பின்வருவனவற்றுள் அலங்காரத் தையல் அல்லாதது

1. கம்பளித்தையல் 2. சங்கிலித்தையல் 3. சிறுநூலோடி 4. நரம்புத்தையல்

24. மரந்தறித்தல், மலைப்பகுதிகளில் மண்ணை வெட்டி அப்புறப்படுத்தல் போன்றவையினால் ஏற்படும் இயற்கை அனர்த்தம்

1. வெள்ளப்பெருக்கு 2. மண்சரிவு 3. சுனாமி 4. சூறாவளி

25. பின்வரும் விளையாட்டுக்களுள் துடுப்புமட்டை பயன்படுத்தாத விளையாட்டு எது?

1. கரப்பந்தாட்டம் 2. பூப்பந்து 3. மேசைப்பந்து 4. துடுப்பாட்டம்


26. அசுத்தமான உணவு, நீரினால் ஏற்படும் நோய்?

1. டெங்கு 2. மலேரியா 3. சீதபேதி 4. சின்னமுத்து

Scanned with CamScanner

27. உணவு சமைப்போர் உணவின் சுகாதாரத்தைப் பேண அணிய வேண்டியது?
1. பாதணி 2. ஏப்ரன் 3. கையுறை 4. தலைக்கவசம்

28. பொதுப் போக்குவரத்துச் சேவையைப் பயன்படுத்துவதால் கிடைக்கும் அனுகூலம் அல்லாதது?
1. பொருள்களைக் கொண்டுசெல்லல் 2. குறைந்த செலவில் பயணிக்க முடிதல்
3. அதிகளவானோரால் பயணிக்க முடிதல் 4. கூடிய நேரத்தில் பயணிக்க முடியும்


29. 
இவ்வுபகரணத்தின் பெயர்?
1. நீரப்பிசாசு 2. நீர்ச்சுழலி
3. மின்காந்தம் 4. நீர்வடிகட்டி

30. கரப்பந்தாட்டத்தில் ஒரு குழுவில் பங்கு பற்றும் வீரர்களின் எண்ணிக்கை.
1. 07 2. 08 3. 06 4. 05

31. வடக்கு மாகாணத்தில் உள்ளடங்காத மாவட்டம்
1. வவுனியா 2. புத்தளம் 3. யாழ்ப்பாணம் 4. கிளிநொச்சி





32. பின்வருவனவற்றில் எது பாதுகாப்பு அற்ற சந்தர்ப்பமாகும்?
1. புகையிரதப் பாதையில் நடத்தல்
2. வீதியில் வலது பக்கத்தால் நடத்தல்
3. மஞ்சட்கோட்டுக் கடவையினால் வீதியைக் கடத்தல்
4. நடைபாதையில் நடத்தல்

33. பலகையின் மேற்பரப்பினை அழுத்தமாகச் சீவுவதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணம்?
1. உளி 2. தூக்குக்குண்டு 3. கைவாள் 4. சீவுளி

34. 
படத்தில் காட்டப்பட்டுள்ள மின்காந்தத்தில் குண்டூசியை அதிகம் கவருவதற்கு நாம் செய்யக்கூடிய வழிகளில் ஒன்று

1. மின்கலத்தின் அளவைக் கூட்டுதல் 2. குண்டூசியின் அளவைக் கூட்டுதல்
3. பிளாஸ்ரிக் வயரை இணைத்தல் 4. பெரிய ஆணியைப் பயன்படுத்துதல்

35. விம்பம் ஒன்றைத் தலைகீழாகக் காட்டும் உபகரணம்
1. தளவாடி 2. மேந்தலை எறியி
3. ஊசித்துளைக் கமரா 4. மாஜாஜாலப் பெட்டி

36. சரியான தொடர்பைக் காட்டும் மின்சுற்று எது?
1. 
2. 
3. 
4. 


37. நுளம்புகளைக் கட்டுப்படுத்துவதற்கு இலகுவான முறை
1. வீட்டிலுள்ள நுளம்புகளை அழித்தல் 2. நுளம்பு முட்டைகளை அழித்தல்
3. நுளம்புக் குடம்பிகளை அழித்தல் 4. சுற்றாடலில் நீர் தேங்குவதற்கு இடமளிக்காதிருத்தல்

Scanned with CamScanner

38. வண்ணத்துப்பூச்சி முட்டையிடுவது
1. இலைகளின் மேற்புறத்தில் 2. இலைகளின் கீழ்ப்புறத்தில்
3. பூவில் 4. நீரில்

39. வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழைப் பெறச் செல்லவேண்டிய இடம்
1. கிராம அலுவலர் காரியாலயம் 2. சுகாதாரத் திணைக்களம்
3. பொலிஸ் நிலையம் 4. ஆட்பதிவுத் திணைக்களம்

40. பச்சை நிறத்தைப் பெறக் கலக்க வேண்டிய வர்ணங்கள்
1. சிவப்பு, நீலம் 2. சிவப்பு, மஞ்சள்
3. நீலம், மஞ்சள் 4. சிவப்பு, கறுப்பு

41. 
இவ்வுபகரணத்தின் மூலம் அறிய உதவுவது
1. காற்றுத் திசைகாட்டி 2. திசையறிகருவி
3. காற்று வேகமானி 4. மழைமானி


42. அங்கீகரிக்கப்பட்ட தரமான பண்டம் என்பதற்கான ஆதாரம்
1. தரச்சான்று 2. தொலைபேசி இலக்கம் 3. முகவரி 4. பண்டத்தின் நிறை

43. மின்னல் ஏற்படும் சந்தர்ப்பங்களில் மிகவும் பாதுகாப்பாக இருக்கும் முறை?
1. மரத்தின் நிழலில் நிற்றல் 2. சமவெளியான இடத்தை நோக்கி ஓடுதல்
3. வீட்டில் கட்டிலின் மீது இருத்தல் 4. உயரமான இடத்தில் ஏறி நிற்றல்

44. 

உருவில் காட்டப்பட்டுள்ள காந்தத்தின் செயற்பாடு மூலம் அறியக்கூடியது.
1. தள்ளும் தன்மை அறிதல் 2. காந்தத்தின் கூடுதலாகக் கவரும் முனையை அறிதல்
3. கவருதல் தன்மையை அறிதல் 4. மின்காந்தத்தை அறிதல்.


விடை எழுதுக.

45. 

இந்த நான்கு எண்ணட்டைகளாலும் உருவாக்கக் கூடிய மிகப் சிறிய எண்ணை எழுதுக.
.....


46. ஆறாயிரத்து முந்நூற்று ஐந்து என்ற எண்ணை நியம முறையில் இலக்கத்தில் எழுதுக.
.....

47. பதினைந்து என்னும் எண்ணின் முந்திய எண்ணை உரோம எண்ணில் எழுதுக.
.....

48. 
1. இத்திண்ம உருவில் எத்தனை விளிம்புகள் உள்ளன?
.....

2. இத்திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன?
.....


Scanned with CamScanner

49. 

வட்டத்தினுள் உள்ள எண்களில் 3 இன் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

.....

50. நிறந் தீட்டப்படாத பகுதியைத் தசம எண்ணில் எழுதுக.



.....

51. தரப்பட்டுள்ள எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

1. 42, 36, 30, 24, ...
2. 1, 3, 6, 10, ...

52. ஒரு பெட்டியில் 25 மாபிள்களும் இன்னொரு பெட்டியில் 13 மாபிள்களும் உள்ளன. இரு பெட்டிகளிலும் சமனாக மாபிள்கள் இருக்கவேண்டுமாயின் கூடுதலாக உள்ள பெட்டியில் இருந்து குறைவாக உள்ள பெட்டிக்குள் எத்தனை மாபிள்களை இடவேண்டும்?


.....

53. கீர்த்திகா ஒரு பூங்கொத்தில் 4 பூக்கள் வீதம் 17 பூங்கொத்துக்கள் செய்து 2 பூக்களை மீதியாக வைத்திருந்தாள் எனின், ஆரம்பத்தில் கீர்த்திகா வைத்திருந்த பூக்களின் எண்ணிக்கை யாது?

.....

54. 500g பருப்பின் விலை ரூபா 36.00 எனின் 750g பருப்பின் விலை யாது?

..... ரூபா..... .சதம்

55. 

கடிகார முகம் காட்டும் நேரம் பிற்பகல் நேரமாகும். இதனை நியம நேரத்தில் எழுதுக.

.....


56. ஒரு பாத்திரத்திலுள்ள நீரிலிருந்து 5 லீற்றர் 650 மில்லி லீற்றரை அகற்றிய பின்னர் எஞ்சியிருக்கும் கனவளவு 12 லீற்றர் 350 மில்லி லீற்றர் ஆகும். பாத்திரத்தில் முதலில் இருந்த நீரின் கனவளவு யாது?

.....

57. 2 kg சீனியை 275 g நிறையுள்ள 3 சம பைக்கற்றுக்களில் இடும்போது எஞ்சியிருக்கும் சீனியின் அளவு யாது?

.....

Scanned with CamScanner

58.  தரப்பட்ட உருவிலுள்ள செங்கோணங்கள் எத்தனை?

.....

59. நீளம் 7m ஐக் கொண்ட கம்பியொன்றில் இருந்து 40cm நீளமான 12 கம்பித்துண்டுகள் வெட்டப்பட்ட பின் எஞ்சியுள்ள கம்பித்துண்டின் நீளம் யாது?

..... மீற்றர் ..... சென்றிமீற்றர்

60. **"சூழலில் மரங்களை நட்டு வளர்ப்பதனால் ஏற்படும் நன்மைகள்"** பற்றி மூன்று வாக்கியங்களை எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம் பெறல்வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்.)

1. .....

.....

2. .....

.....

3. .....

.....

Scanned with CamScanner

01) ரக்ஷாயன் தன்னிடமிருந்து பணத்தின் கால் பகுதியை செலவு செய்து புத்தகம் ஒன்றினை வாங்கினான். புத்தகத்தின் விலை ரூபாய் 800 எனின், குமாரிடம் இருந்த மொத்தப் பணம் எவ்வளவு?

.....

.....

02) கிபிசாணன் ஒரு வருடம் முழுவதும் 10808 தேங்காய்களை உரித்தான். கேமன், கிபிசாணனை விடவும் இரண்டு தேங்காய்கள் கூடுதலாக உரித்தான். கேமன் உரித்த தேங்காய்கள் எத்தனை?

.....

.....

03) திரைப்படம் ஒன்றினைப் பார்ப்பதற்காக 4546 பிள்ளைகளும், 3526 வயது வந்தவர்களும் வந்திருந்தனர். எனின், திரைப்படம் பார்க்க வந்தவர்கள் மொத்தம் எத்தனை பேர்?

.....

.....

04) பண்ணையில் இருந்த மாடுகளின் கால்களின் எண்ணிக்கை 84 ஆகும். கோழிகளின் கால்களின் எண்ணிக்கை 82 ஆகும். இப்பண்ணையிலுள்ள மாடுகள், கோழிகளின் எண்ணிக்கை யாது?

.....

.....

05) மணிக்கு 45 கிலோமீற்றர் வேகத்தில் பிரயாணம் செய்யும் பஸ் வண்டி ஒன்று கண்டியிலிருந்து காலிக்கு சென்றடைய நான்கு மணி நேரம் எழுத்தது. எனின், கண்டியிலிருந்து காலியிற்கான தூரம் எவ்வளவு?

.....

.....

06) ஒரு நீர்த்தாங்கியின் மொத்தக் கொள்ளளவு 8750 லீற்றர் ஆகும். அதில் தற்பொழுது 3695 லீற்றர் நீர் உண்டு. தாங்கியை நிரப்ப இன்னும் தேவையான நீரின் அளவு யாது?

.....

.....

Scanned with CamScanner

07) மாம்பழம் ஒன்றின் விலை ரூ.12 ஆகும். கொய்யாப்பழம் ஒன்றின் விலை ரூ.16 ஆகும். எனின், இரண்டு மாம்பழங்களையும், இரண்டு கொய்யாப்பழங்களையும் வாங்க எவ்வளவு பணம் தேவை?

.....

.....

08) பெட்டி ஒன்றிலுள்ள சிவப்பு நிற முட்டைகளின் எண்ணிக்கை 35 ஆகும். வெள்ளை நிற முட்டைகளின் எண்ணிக்கை அதனை விட 15 அதிகம் எனின், பெட்டியிலுள்ள மொத்த முட்டைகளின் எண்ணிக்கை யாது?

.....

.....

09) 36 தோடம்பழங்களை சமமாகப் பிரித்து ஒன்பது கூடைகளில் இட்டால் ஒரு கூடையிலுள்ள தோடம்பழங்களின் எண்ணிக்கை யாது?

.....

.....

10) அன்னாசிப்பழம் ஒன்றின் நிறை , பப்பாசிப்பழம் இரண்டின் நிறைக்குச் சமமாகும். 80 பப்பாசிப்பழங்களின் நிறைக்கு எத்தனை அன்னாசிப்பழங்களின் நிறை சமமாகும்?

.....

.....

11) பெட்டி ஒன்றில் 546 மாங்காய்களும், இன்னுமொரு பெட்டியில் 184 மாம்பழங்களும் உள்ளன. இரண்டு பெட்டிகளிலும் உள்ள மாம்பழங்கள் எத்தனை?

.....

.....

12) தோடம்பழம் ஒன்றின் விலை ரூ.35 ஆகும். ஐந்து தோடம்பழங்களின் விலை யாது?

.....

.....

Scanned with CamScanner

13) ஒரு வகுப்பில் 45 பிள்ளைகள் உள்ளனர். அவர்கள் சமமாக மூன்று குழுக்களாக பிரிக்கப்பட்டனர். எனின், ஒரு குழுவில் உள்ள பிள்ளைகள் எத்தனை?

.....

.....

14) 3 லீற்றர் 500 மில்லிலீற்றர் குளிர்பானத்தினை 500 மில்லிலீற்றர் வீதம் எத்தனை பாத்திரங்களுக்கு ஊற்றலாம்?

.....

.....

15) அச்சரா ஒரு மணித்தியாலத்தில் 40 மலர்மாலைகளைக் கட்டுவாள். தனுஸ்ரி 30 நிமிடங்களில் 10 மலர்மாலைகளைக் கட்டுவாள். எனின், அச்சரா, 100 மாலைகளைச் கட்டும் போது தனுஸ்ரி எத்தனை மலர்மாலைகளைச் செய்வாள்?

.....

.....

16) குறிப்பிட்ட ஒரு வேலையை செய்வதற்கு 3 மனிதர்களுக்கு 4 நாட்கள் எடுக்கும். அதே வேலையை 6 மனிதர்களுக்குச் செய்வதற்கு எத்தனை நாட்கள் எடுக்கும்?

.....

.....

17) மு.ப 7.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை மு.ப 11.30 மணிக்கு இடைவேளை வழங்கப்பட்டது. எனின், அது வரை பாடசாலை நடைபெற்ற மணித்தியாலங்கள் எத்தனை?

.....

.....

18) ஒரு பெட்டியில் 615 பிஸ்கட்டுக்கள் உள்ளன. ஒருவருக்கு 60 பிஸ்கட்டுக்கள் வீதம் எத்தனை பேருக்கு வழங்கலாம்? எஞ்சும் பிஸ்கட்டுக்கள் எத்தனை?

.....

.....

Scanned with CamScanner

19) புகைவண்டியொன்றில் 564 பிரயாணிகள் உள்ளனர். முதல் தரிப்பிடத்தில் 83 பேர் இறங்கிச் சென்றதுடன் மேலும், 28 பேர் புகைவண்டியில் ஏறினர். இப்போது புகைவண்டியில் மொத்தம் எத்தனை பேர் உள்ளனர்?

.....

.....

20) அரிசி மூட்டையின் நிறை 50கிலோக்கிராம் ஆகும். அரிசி உள்வாங்கப்பட்ட உறையின் நிறை 1 ½ கிலோக்கிராம் எனின், அதிலுள்ள அரிசியின் நிறை யாது?

.....

.....

21) 3500 மில்லிலீற்றர் கொள்ளவுள்ள பாத்திரத்தில் 1200மில்லிலீற்றர் நீர் உண்டு. அப்பாத்திரத்திற்கு இன்னும் 3 லீற்றர் நீர் ஊற்றினால் அப்பாத்திரத்தில் இருந்து நிரம்பி வெளியேறும் நீரின் அளவு யாது?

.....

.....

22) ஒரு பிள்ளைக்கு 5 பிஸ்கட்டுக்கள் வீதம், 32 பிள்ளைக்கு தேவையான பிஸ்கட்டுக்கள் எத்தனை?

.....

.....

23) வருடத்தில் 30 தினங்களைக் கொண்ட மாதங்களை முறைப்படி எழுதுக?

.....

.....

24) வகுப்பறை ஒன்றில் மூன்று கதிரைகளைக் கொண்ட 14 வரிசைகளும், நான்கு கதிரைகளைக் கொண்ட 6 வரிசைகளும் உண்டு. அவ்வரிசையிலுள்ள மொத்தக் கதிரைகள் எத்தனை?

.....

.....

Scanned with CamScanner

25) புத்தக அலுமாரி ஒன்றில் ஒரு தட்டில் 12 புத்தகங்கள் வைக்கலாம் எனின், 672 புத்தகங்களை வைப்பதற்கு எத்தனை தட்டுக்கள் தேவை?

.....

.....

26) 3 சவர்க்காரக் கட்டிகளை வாங்கும் போது ஒன்று இலவசமாக வழங்கப்படும். 60 சவர்க்காரக் கட்டிகளை வாங்கும் போது எத்தனை இலவசமாகக் கிடைக்கும்?

.....

.....

27) ஒரு மோட்டார் வண்டியில் 4 பேர் பயணம் செய்ய முடியும். 36 பேர் பயணிக்க எத்தனை மோட்டார் வண்டிகள் தேவை?

.....

.....

28) ஒரு தீப்பெட்டியில் 48 தீக்குச்சிகள் உண்டு. அவ்வாறான 8 பெட்டிகளில் எத்தனை தீக்குச்சிகள் உண்டு?

.....

.....

29) உபசரிப்பிற்காக 900 மில்லிலீற்றர் குளிர்பானம் கொண்டு வரப்பட்டது. அதில் 672 மில்லிலீற்றர் குளிர்பானம் பருகிய பின்பு எஞ்சிய பானத்தின் அளவு யாது?

.....

.....

30) 12 பென்சில்களை கொண்ட நான்கு பெட்டிகளும், 60 பென்சில்களைக் கொண்ட 3 பெட்டிகளும் உண்டு எனின், ஏழு பெட்டிகளில் உள்ள பென்சில்கள் எத்தனை?

.....

.....

Scanned with CamScanner

31) ஒருவருக்கு 3 புத்தகம் வீதம் 438 புத்தகங்களை எத்தனை பேருக்கு பங்கிடலாம்?

.....

.....

32) ஒரு லீற்றர் 500 மில்லிலீற்றர் குளிர்பானத்தினை 275 மில்லிலீற்றர் அளவான 4 கிண்ணங்களில் ஊற்றிய பின்பு எஞ்சும் குளிர்பானத்தின் அளவு யாது?

.....

.....

33) புத்தக சாலை ஒன்றில் 866 தமிழ்ப்புத்தங்களும், 68 ஆங்கிலப் புத்தகங்களும் உண்டு எனின், புத்தக சாலையிலுள்ள மொத்தப் புத்தகங்கள் எத்தனை?

.....

.....

34) நோயாளி ஒருவருக்கு 6 மணித்தியாலத்திற்கு ஒருமுறை மருந்து அருந்துமாறு கூறப்பட்டது. மு.ப 6.00 மணிக்கு முதல் முறை மருந்து அருந்தினார் எனின், மூன்றாவது முறை எத்தனை மணிக்கு மருந்தை அருந்துவார்?

.....

.....

35) 2 வில்லைகள் வீதம் ஒரு நாளைக்கு மூன்று முறை பாவிக்குமாறு 30 வில்லைகள் வழங்கப்பட்டன. எனின், அது எத்தனை நாளைக்குப் போதுமானது?

.....

.....

36) 5 கிலோக்கிராம் பூசணிக்காயில், இரண்டு கிலோக்கிராம் 350 கிராம் வெட்டியெடுக்கப்பட்டால் எஞ்சிய பூசணிக்காயின் நிறை யாது?

.....

.....

Scanned with CamScanner

37) 132 மாங்காய்களில் கால் பகுதி பழுதடைந்தது எனின், பழுதடையாத மாங்காய்கள் எத்தனை?

.....

.....

38) சுஜாதா வித்தியாலத்தில் உள்ள மாணவர்களை விடவும் 2325 மாணவர்கள் கூடுதலாக ராகுல வித்தியாலயத்தில் உள்ளனர். ராகுல வித்தியாலத்தில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை 3516 எனின், இரண்டு பாடசாலைகளிலும் உள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

.....

.....

39) மிளகாய்த் தூள் 150 கிராமின் விலை ரூ.52.50 ஆகும். எனின், ஒரு கிலோக்கிராம் மிளகாய்த் தூளின் விலை யாது?

.....

.....

40) பிள்ளையினதும், புத்தகப்பையினதும் நிறை 45kg ஆகும். புத்தகப்பையின் நிறை 12 kg எனின், பிள்ளையின் நிறை யாது?

.....

.....

41) ரூ.14 விலையுடைய 6 பேனாக்களையும், ரூ. 53 விலையுடைய 2 சித்திரக் கொப்பிகளையும் வாங்க வேண்டிய பெரேராவிடம் 150 ரூபாய் உள்ளது. எனின், பொருட்களை வாங்க இன்னும் தேவையான பணம் எவ்வளவு?

.....

.....

42) வேலி ஒன்றின் 5மீற்றர் இடைவெளிக்கொன்றாக 15 கொங்கிறீர் தூண்கள் நடப்பட்டது எனின், முதலாவது தூணிலிருந்து கடைசித் தூண் வரையிலான தூரம் யாது?

.....

.....

Scanned with CamScanner

43) 492 மாம்பழங்கள் 6 பெட்டிகளில் சமமாக பொதி செய்யப்பட்டால், ஒரு பெட்டியிலுள்ள மாம்பழங்கள் எத்தனை?

.....

.....

44) வாழைப்பழசீப்பு ஒன்றில் 14 பழங்கள் காணப்பட்டன. ஒரு பழத்தின் விலை ரூ.6.50 எனின், வாழைப்பழச் சீப்பிற்கான விலை யாது?

.....

.....

45) மாம்பழம் ஒன்றின் விலை ரூ.12 ஆகும். அப்பிள் பழம் ஒன்றின் விலை ரூ.15 ஆகும். கொய்யாப்பழம் ஒன்றின். விலை ரூ.5 எனின், ஒருவருக்கு 3 மாம்பழம், 2 அப்பிள்பழம், 5 கொய்யாப்பழம் வாங்கத் தேவையான பணம் எவ்வளவு?

.....

.....

46) ஒரு கிலோக்கிராம் தேயிலையின் விலை ரூபாய் 200 , சீனி1 **kg** ரூ.90.00 எனின், **250g** தேயிலையும், **500g** சீனியும் வாங்கத் தேவையான பணம் எவ்வளவு?

.....

.....

47) அம்பிகாவின் நிறை **25kg 600g** ஆகும். அவளது தாய் அவளை விடவும் இரு மடங்கு நிறையுள்ளவர் எனின், அம்பிகாவின் அம்மாவின் நிறை யாது?

.....

.....

48) 318 சவர்க்காரக் கட்டிகளை மூன்று கட்டிகள் வீதம் உறையிடுவதற்குத் தேவையான உறைகள் எத்தனை?

.....

.....

Scanned with CamScanner

49) ஒரு குளிர்பான போத்தலினால், மூவருக்கு பரிமாறலாம். 17 பேருக்கு பரிமாற எத்தனை குளிர்பானப் போத்தல்கள் தேவை?

.....

.....

50) ஒரு பிள்ளைக்கு மூன்று பிஸ்கட்டுக்கள் வீதம் 3 நாளைக்கு 72 பிள்ளைகளுக்கு கொடுக்கத் தேவையான பிஸ்கட்டுக்கள் எத்தனை?

.....

.....

51) பி.ப 12.50 மணிக்கு வந்து சேர வேண்டிய புகையிரதம் ஒரு மணித்தியாலம் 15 நிமிடம் கழித்து வந்து சேர்ந்தது. எனின், புகையிரதம் வந்து சேர்ந்த நேரம் யாது?

.....

.....

52) ஒரு பாத்திரத்தினை நிரப்புவதற்கு 5 லீற்றர் 540 மில்லிலீற்றர் நீர் தேவை எனின், அது போன்று நான்கு பாத்திரங்களை நிரப்ப தேவையான நீர் எவ்வளவு?

.....

.....

53) ஒரு சித்திரக் கொப்பியின் விலை ரூ.25 , பென்சில் பெட்டியொன்றின் விலை ரூ.45 எனின், இரண்டு பொருளையும் வாங்கிய ஒருவன் ரூ.100 ஐ செலுத்தினான். அவன் பெறும் மீதிப்பணம் எவ்வளவு?

.....

.....

54) நிமலின் நிறையை விடவும் நிமலின் அம்மாவின் நிறை இரண்டு மடங்காகும். அம்மாவின் நிறை 56kg எனின், நிமலின் நிறை யாது?

.....

.....

Scanned with CamScanner

55) 750 மில்லிலீற்றர் வீதம் கொண்ட 6 போத்தல் குளிர்பானத்தினை ஒரு பாத்திரத்தில் ஊற்றிய பின் அப்பாத்திரத்தில் உள்ள குளிர்பானத்தின் அளவு யாது?

.....

.....

56) ஒரு கிலோ அரிசியின் விலை ரூ.63 ஆகும். எனின், **2 kg 500g** அரிசியின் விலை யாது?

.....

.....

57) பாத்திரம் ஒன்று கொள்ளக்கூடிய நீரின் அளவு 8750 லீற்றர் ஆகும். அதில் 3695 லீற்றர் நீர் உள்ளது எனின், அதனை நிரப்பத் தேவையான நீரின் அளவு யாது?

.....

.....

58) **5ml** அளவினை உடைய இரண்டு தேக்கரண்டி வீதம் ஒரு நாளைக்கு 3 தடவைகள் ஒரு நோயாளிக்கு வழங்குவதற்கு தேவையான மருந்து எவ்வளவு?

.....

.....

59) **5m** நீளமான கயிற்றிலிருந்து **20cm** நீளமான 5 துண்டுகள் வெட்டி எடுக்கப்பட்டால் எஞ்சிய கயிற்றின் நீளம் யாது?

.....

.....

60) மு.ப 10.00 மணிக்கு புறப்பட இருந்த பேருந்து ஒன்று 20 நிமிடங்கள் தாமதமாகவே பிரயாணத்தினை ஆரம்பித்தது. பிரயாணத்திற்காக 4 மணி 45 நிமிடங்கள் எடுத்தது எனின், பிரயாணத்தினை முடித்த நேரம் யாது?

.....

.....

Scanned with CamScanner

61) 320 புத்தகங்களை 3 புத்தகங்கள் வீதம் எத்தனை பேருக்கு வழங்கலாம்? எஞ்சிய புத்தகங்களின் எண்ணிக்கை யாது?

.....

.....

62) 1996 யூலை 21 ஆந்திகதி சமந்தி பிறந்த திகதி ஆகும். எனின், 2021 யூலை 21 ஆந்திகதி சமந்தியின் வயது எத்தனை?

.....

.....

63) ஒரு லீற்றர் 500 மி.லீ நீரினை சம அளவுள்ள 4 பாத்திரங்களில் ஊற்றினால் ஒரு பாத்திரத்திலுள்ள நீரின் அளவு யாது?

.....

.....

64) சிகானிடம் வேலுவை விட 3 தோடம்பழங்களும், யோசப்பை விட 2 தோடம்பழங்களும் அதிகமாக உண்டு. வேலுவிடம் உள்ள தோடம்பழங்கள் 4 எனின், யோசப்பிடம் உள்ள தோடம்பழங்கள் எத்தனை?

.....

.....

65) 500g சீனியின் விலை ரூபாய் 47 ஆகும். 100 கிராம் தேயிலையின் விலை ரூபாய் 42 ஆகும். எனின், சீனி **1kg** இனதும் தேயிலை **200g** இனதும் விலை யாது?

.....

.....

66) **500g** சீனியையும், **200g** தேயிலையும், வாங்கிய ஒருவர் வியாபாரியிடம் ரூ.200 ஐக் கொடுத்தால் பெறப்படும் மீதித் தொகை யாது?

.....

.....

Scanned with CamScanner

67) 2 லீற்றர் கொள்ளளவுடைய பாத்திரத்தினை நீரால் நிரப்ப 200 மில்லிலீற்றர் அளவுடைய பாத்திரத்தினால் எத்தனை தடவை நீர் ஊற்ற வேண்டும்?

.....

.....

68) அப்பா 8 பழக்கன்றுகள் 2 தென்னங்கன்றுகள் 11 பூக்கன்றுகள் , 2 மிளகாய்க்கன்றுகள் , 2 கத்தரிக்கன்றுகள் என்பவற்றினை வீட்டுத் தோட்டத்தில் நாட்டினார். எனின், அப்பா நாட்டிய மொத்தக் கன்றுகள் எத்தனை?

.....

.....

69) பழவடி ஒன்றில் கொய்யாவை விட இரு மடங்கு தோடம்பழமும் ,தோடம்பழம் போல் இரு மடங்கு மாம்பழமும் உண்டு. கொய்யாவின் எண்ணிக்கை 25 எனின், பழவடியிலுள்ள மாம்பழங்கள் எத்தனை?

.....

.....

70) 40 நிமிடத்திற்கு ஒரு முறை ஒலிதரும் மணியொன்று , மு.ப 6.15 இற்கு மணிக்கு இரண்டாம் தடவையாக ஒலித்தது. எனின், அது நான்காவது தடவையாக எத்தனை மணிக்கு ஒலிக்கும்?

.....

.....

71) ஒரு கி.கி அரிசியின் விலை ரூ.48 ஆகும். 2 கி.கி 500 கி அரிசியின் விலை யாது?

.....

.....

Scanned with CamScanner

72) மு.ப 9 மணிக்கு புறப்பட இருந்த பஸ்வண்டி ஒன்று , 30 நிமிடங்கள் தாமதித்தே பிரயாணத்தை ஆரம்பித்தது. நான்கு மணி 15 நிமிடங்கள் பிரயாணத்திற்காக செலவாகியது எனின், பஸ் வந்தடைந்த நேரம் யாது?

.....

.....

73) ரூ.47.00 விலையுடைய அப்பியாசக் கொப்பியொன்றும், ரூ.12.50 சதம் விலையுடைய பேனாவொன்றினையும் வாங்குவதற்கு விக்கியிடம் இருப்பது ரூ.50.00 எனின், விக்கிக்கு குறித்த பொருட்களை வாங்குவதற்கு இன்னும் எவ்வளவு பணம் தேவை?

.....

.....

74) ஒரு போத்தலில் உள்ள நீரின் அளவு **750ml** ஆகும். அவ்வாறான 12 போத்தல்களிலும் உள்ள நீரின் அளவைக் காண்க?

.....

.....

75) ஒரு கயிற்றை சமமாக இரண்டு துண்டுகளாக வெட்டி அதில் ஒரு துண்டினை மீண்டும் 4 துண்டுகளாக வெட்டிய போது அத்துண்டின் நீளம் 1 மீற்றர் எனின், முழுக்கயிற்றின் நீளம் யாது?

.....

.....

76) புகையிரத நிலையத்திற்கு 14:20 மணிக்கு வரவேண்டிய புகையிரதம் 45 நிமிடங்கள் தாமதமாகியே வரும் என அறிவிக்கப்பட்டது. எனின், புகையிரதம் வந்து சேரும் நேரம் யாது?

.....

.....

Scanned with CamScanner

77) தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை ஒன்றில் ஆனந்தி பெற்ற புள்ளி சாந்தி பெற்ற புள்ளியை விட 10 அதிகமாகும். கவிதா சாந்தியை விட இரண்டு புள்ளிகள் குறைவாகப் பெற்றாள். ஆனந்தி பெற்ற புள்ளிகள் 185 எனின், கவிதா பெற்ற புள்ளி யாது?

.....

.....

78) குமாரின் தற்போதய வயது 8 வருடங்களாகும். அது அவனது சகோதரியின் வயதை விடவும் 4 மடங்காகும். எனின், குமாரின் சகோதரியின் வயது யாது?

.....

.....

79) சுதாகர் தன்னிடமிருந்த பணத்தின் அரைப்பகுதியை கொடுத்து புத்தகம் ஒன்று வாங்கினான். தற்போது அவனிடம் எஞ்சியுள்ள தொகை ரூ.125 எனின், அவனிடம் இருந்த மொத்தப் பணம் எவ்வளவு?

.....

.....

80) இரண்டு அப்பிள்பழம் வாங்கும் பணத்திற்கு இரண்டு மாம்பழமும், ஒரு கொய்யாப்பழமும் வாங்கலாம். நான்கு கொய்யாப்பழம் வாங்கும் பணத்திற்கு இரண்டு அப்பிள்ப்பழம் வாங்கலாம். எனின், மாம்பழம் இரண்டின் விலை எத்தனை கொய்யாப்பழத்தின் விலைக்குச் சமனாகும்?

.....

.....

81) அமாலியிடம் இருந்த பணத்தின் கால் பகுதியை செலவழித்து புத்தகம் ஒன்றியை வாங்கினாள். புத்தகத்தின் விலை ரூ.76 எனின், அமாலியிடம் இருந்து பணம் எவ்வளவு?

.....

.....

Scanned with CamScanner

82) பாரதி தமிழ் மகாவித்தியாலத்தில் உள்ள ஆண் மாணவர்களின் எண்ணிக்கை 425 ஆகும். மாணவிகளின் எண்ணிக்கை 138 ஆகும். அப்பாடசாலையிலுள்ள மொத்த மாணவர் தொகை யாது?

.....

.....

83) 416 புத்தகங்களை 4 புத்தகங்கள் வீதம் பொதி செய்யப்பட்டது எனின், அவ்வாறு பொதி செய்யப்பட்ட பொதிகள் எத்தனை?

.....

.....

84) கடந்த புதன்கிழமை மே 1 ஆகும். நேற்று மே 3 ஆந்திகதி ஆகும். இன்றைய தினம் என்ன கிழமையாகும்?

.....

.....

85) பேருந்து வண்டியில் ஏறிய தரிந்து 7 டிக்கட் வாங்கிக் கொண்டு 50 ரூபாய் தாள் நாணயம் ஒன்றினைக் கொடுத்தான். பேருந்து நடத்துநர் தரிந்துவிடம் இன்னும் ரூ.18 ஐ வாங்கிக் கொண்டு ரூ.20 ஐ மீதியாகக் கொடுத்தான். எனின் தரிந்துவிற்கான பேருந்துக் கட்டணம் யாது?

.....

.....

86) பென்சில் ஒன்றின் விலை ரூ.12.50 ஆகும். பேனா ஒன்றின் விலை ரூ.15 ஆகும். சப்தனா 3 பென்சில்களும், 2 பேனாக்களும் வாங்கினாள் எனின், அவள் அவற்றிற்காக கொடுத்த பணம் எவ்வளவு?

.....

.....

Scanned with CamScanner

87) புகைவண்டியில் இருந்த பிரயாணிகளின் எண்ணிக்கை 625 ஆகும். முதலாவது தரிப்பிடத்தில் 125 பேர் இறங்கிச் செல்ல 25 பேர் புதிதாக வந்தனர் எனின், தற்போது புகையிரதத்தில் உள்ள பிரயாணிகளின் எண்ணிக்கை யாது?

.....

.....

88) ஒருவருக்கு 3 புத்தகங்கள் வீதம் , 320 புத்தகங்கள் எத்தனை பேருக்குப் பங்கிடலாம்?

.....

.....

89) 460 மாம்பழங்களை 4 பெட்டிகளில் சமமாக அடைக்கப்பட்டால் ஒரு பெட்டியில் உள்ள மாம்பழங்கள் எத்தனை?

.....

.....

90) வகுப்பறை ஒன்றில் 2 கதிரைகளைக் கொண்ட 12 வரிகளும், 3 கதிரைகளைக் கொண்ட 6 வரிகளும் உள்ளது எனின், வகுப்பறையில் உள்ள கதிரைகளின் மொத்த எண்ணிக்கை யாது?

.....

.....

91) 6 அழிறப்பர்களைக் கொண்ட 5 பெட்டிகளும், 8 அழிறப்பர்களைக் கொண்ட 3 பெட்டிகளும் உள்ளன. இந்த 7 பெட்டிகளிலும் உள்ள அழிறப்பர்கள் எத்தனை?

.....

.....

92) **1500ml** கொள்ளளவுடைய பாத்திரம் ஒன்றில் **900ml** நீர் உண்டு. இன்னும் **900ml** நீர் ஊற்றினால் நிரம்பி வெளியேறும் நீரின் அளவு யாது?

.....

.....

Scanned with CamScanner

93) 100m நீளமுடைய நாடாவொன்றில் மத்தியில் **15m** சேதமடைந்தது. அதனை அகற்றி விட்டு இரண்டு துண்டுகளையும் **5cm** வீதம் ஒன்றின் மேல் ஒன்று வைத்து ஒட்டிய பின், நாடாவின் நீளம் யாது?

.....

.....

94) திங்கட்கிழமையை விட செவ்வாய்க்கிழமை ரூபாய் 10 குறைவாகவும், செவ்வாயை விட புதன்கிழமை ரூபாய் 5 குறைவாகவும், ஒருவர் செலவழித்தார். அவர் செவ்வாய்க்கிழமை செலவழித்த பணம் ரூபாய் 30.00 எனின், அம்மூன்று நாட்களும் செலவழித்த தொகை யாது?

.....

.....

95) ரூபாய் 25 க்கு சித்திரக் கொப்பி ஒன்றும், ரூபாய் 12.50 இற்கு பேனை ஒன்றும் பெற்றுக் கொண்டு ஒருவர் ரூபாய் 150.00 ஐக் கொடுத்தால் அவர் பெறும் மீதித் தொகை யாது?

.....

.....

96) ஒருவருக்கு இரண்டு புத்தகங்கள் வீதம் 366 புத்தகங்களை எத்தனை பேருக்குக் கொடுக்கலாம்?

.....

.....

97) 369 தோடம்பழங்களை 3 பெட்டிகளில் சமனாக அடுக்கினால், ஒரு பெட்டியில் உள்ள தோடம்பழங்கள் எத்தனை?

.....

.....

Scanned with CamScanner

98) 416 கொய்யாப்பழங்களை 4 பேர் சமனாக பங்கிட்டால் ஒருவருக்குக் கிடைக்கும் கொய்யாப்பழங்கள் எத்தனை?

.....

.....

99) ஒரு கூடையில் 306 பூக்கள் இருந்தன. இவற்றை 3 சம பகுதிகளாக பிரித்தால், ஒரு குவியலில் உள்ள பூக்கள் எத்தனை?

.....

.....

100) ஒரு பெட்டியில் 5 முட்டைகளை அடுக்கலாம் எனின், 300 முட்டைகளை அடுக்கத் தேவையான பெட்டிகள் எத்தனை?

.....

.....

Scanned with CamScanner